1005

1005

M. 2210.

வருஷ சந்தா ரூ. 1-8-0.

*Authoress & Proprietrix* } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(Mrs. V. M. PARTHASARATHY IYENGAR.)

# ஜகன்மோகினி

| மலர் 11 | 1934 ஞு பிப்ரவரி மீ | இதழ் 3 |
| --- | --- | --- |

"ஜெயஸஞ்ஜீவி"

—:o:—

உங்களுடைய லைப்ரரியில்

ஜெயஸஞ்ஜீவி இருக்கிறதா?

அது இல்லையாயின்

பூர்த்தி பெற்றதாகுமா?

உடனே நாலணா தபால்தலை யனுப்பிப்

பெற்றுக்கொள்ளுங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF B...
23 MAY 1934
MADRAS

...கன்மோகினி" ஆபீஸ்,

... தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

... கடைசித் தேதியில் சஞ்சிகை வெளிவரும்.

தனிப் பிரதி விலை அணா 2.

3L
ஜகஷ, N22 5 ம
1934·11·3
182963

# “ஜெ ய ஸ ஞ் ஜீ வி”

இனாமாக வேண்டுவோர் உடனே ஒரு புதிய சந்தாதாரரைச்சேர்த்தனுப்புங்கள்.

## புதிய சந்தாநேயர்களுக்கு!

“பொறுமையின் பொக்கிஷம்” அல்லது “படாடோபத்தின் பரிபவம்” என்னும் உருக்கமான நாவலைப் படிக்கவேண்டுமாயின் நான்கணா ஸ்டாம்பு அனுப்பவும்.

---

பதினொன்றாவதாண்டுக் கொண்டாட்டம்

**50** ரூபாய் பரிசுகளின் விவரம்.

இம்மாதம் 25-ந் தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றைத் தெரிவிக்கவும்.

| பரிசு ந. | ரூ. | சந்தா ந. | |
|---|---|---|---|
| 1 | 15 | A. 19. | Mr. Md. Abubucker Saib, Thawatti. |
| 2 | 10 | K. 18. | ,, P. Krishnaswamy, Ratnapura. |
| 3 | 10 | S. 651. | Mrs. Siddhi Zuneida Bibi, Nagore. |
| 4 | 5 | V. 252. | Mr. T. Velappan, Erode. |
| 5 | 5 | N. 183. | ,, Natarajan, 10, Arundel St. Mylapore |
| 6 | 5 | L. 53. | Sri Lakshmi Ammal, Mannargudi. |

# "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"




எத்தனை இடங்களில் இம்மாதிரி பேச்சு
கள் நடக்கின்றன இதன் உண்மை பரி-
சோதிக்க தங்கள் பக்கத்திலுள்ள
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" வியாபாரியிடம்
நேரில் கேட்டால் தெரியவரும்.

# பிரதாப விகடன்

## ஒரு மாதாந்திரப் பத்திரிகை.

சிறு கதைகள், வேடிக்கை, விநோதம் நிறைந்த பல பக்கங்களுள்ளது. தனிப் பிரதி அணா இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. வெளி நாடுகளுக்கு இரட்டத்தனை. எல்லா பத்திரிகைகள் விற்போர்களிடமும், ஹிக்கின்பாத்தம்ஸ் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜெண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

"பிரதாப விகடன்" ஆபீஸ்
தபால் பெட்டி 23.
மதராஸ்.


---

## உங்களுக்கு எந்த நாவல் இனாமாக வேண்டும்?

கீழ்க்கண்ட விவரத்தைப் படித்து, உங்களது நேயர்களின் சந்தாவை அனுப்பும்போது, வேண்டிய புத்தகங்களின் பெயரைத் தெரிவியுங்கள். மறு தபாலில் தபாற்செலவின்றி அனுப்புகிறோம்.

| | | பரிசு புத்தகங்கள் |
|---|---|---|
| (1) | ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு | இன்ப மனோகரி |
| (2) | 2 புதிய சந்தாதாரர்களை ,, | நளினசேகரன் அல்லது மூன்று வைரங்கள் அல்லது வீரவஸந்தா |
| (3) | 3 ,, ,, | கோபாலரத்னம் |
| (4) | 4 ,, ,, | கதம்பமாலை அல்லது சுகந்தபுஷ்பம் |
| (5) | 5 ,, ,, | கௌரீமுகுந்தன் அல்லது ஸாரமதி |
| (6) | 6 ,, ,, | சண்பகவிஜயம் |
| (7) | 7 ,, | சாமளநாதன் அல்லது நக்மிணீகாந்தன் அல்லது நவநீதகிருஷ்ணன் |
| (8) | 8 ,, ,, | வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனு அல்லது பரிமளகேசவன் & உத்தமசீலன் |

கீழ் குறித்த வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் நாவல்களையும் மற்றும் எமது இதர பிரசுரங்களையும் மிகவும் குறைந்த விலைக்கு தபால் செலவு இன்றி 1934 பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் ஏப்ரல் மாதம் 30-ந் தேதி வரையில் விற்கத் தீர்மானித்துள்ளோம். முக்கிய அறிவிப்பு: (1) கீழ்க்குறித்த தொகுதிகளைப் பிரித்துக் கொடுக்க முடியாது. (2) எத்தனை தொகுதிகள் தேவையோ அதன் முழுக்கிரயத்தையும் மணி ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும். சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளிநாட்டு நண்பர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும் அணு 8 சேர்த்து அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

**தொகுதி—1.**

| | | |
|---|---|---|
| 1. திகம்பரசாமியார் பால்ய லீலை | 5 | 0 |
| 2. இராஜேந்திர மோகன | 1 | 4 |
| | 6 | 4 |
| கமிஷன் | 2 | 12 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 3 | 8 |

**தொகுதி—2.**

| | | |
|---|---|---|
| 1. சதானந்த போதக சாமியார் | 2 | 4 |
| 2. ரமாமணி | 2 | 0 |
| | 4 | 4 |
| கமிஷன் | 1 | 12 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 2 | 8 |

**தொகுதி—3.**

| | | |
|---|---|---|
| 1. துரைக்கண்ணம்மாள் | 2 | 4 |
| 2. மிஸிஸ் லீலா மோகினி | 3 | 0 |
| | 5 | 4 |
| கமிஷன் | 2 | 4 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ. | 3 | 0 |

**தொகுதி—4.**

| | | |
|---|---|---|
| 1. பன்னியூர் படாடோப சர்மா | 2 | 4 |
| 2. மன்மதபுரி மூடுமந்திரம் | 2 | 12 |
| | 5 | 0 |
| கமிஷன் | 2 | 0 |
| ஷை 2 நாவல்களின் விலை ரூ | 3 | 0 |

**தொகுதி—5.**

| | | |
|---|---|---|
| 1. மன்மத விஜயம் | 0 | 4 |
| 2. சண்முக வடிவு | 0 | 4 |
| 3. சந்திர மீனன் | 2 | 0 |
| | 2 | 8 |
| கமிஷன் | 1 | 0 |
| ஷை 3 நாவல்களின் விலை ரூ. | 1 | 8 |

**தொகுதி—6.**

| | | |
|---|---|---|
| 1. தில்லை நாயகி | 2 | 4 |
| 2. சரோஜனி | 2 | 0 |
| 3. வீரகேசரி | 1 | 12 |
| | 6 | 0 |
| கமிஷன் | 2 | 0 |
| ஷை 3 நாவல்களின் விலை ரூ. | 4 | 0 |

**சங்கீதத் தொகுதி—1.**

| | | |
|---|---|---|
| 1. ஸங்கீத சிந்தாமணி | 3 | 0 |
| 2. திராவிடகானம் | 3 | 0 |
| 3. ஸங்கீத சில்வரைக் கோர்வை | 3 | 0 |
| 4. கீர்த்தன ரத்னங்கள் | 1 | 4 |
| | 10 | 4 |
| கமிஷன் | 4 | 4 |
| ஷை 4 சங்கீத புத்தகங்களும் | 6 | 0 |

# எம். எஸ். ராமுலு கம்பெனி,

எஸ்பிளனேட்,
மதராஸ்.

**பங்கு 1**
**ரூ. 3-8-0**
சாமளநாதன்
சண்பக விஜயம்
கௌரீமுகுந்தன்

நாவல் பிரியர்களுக்கு
நல் விருந்து

**பங்கு 4**
**ரூ. 3-4-0**
பத்மசுந்தரன்
சாருலோசன

குறைந்த விலை

நமது "ஜகன்மோகினி" யின் பதினொன்ருவதாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, நமது நாவல்களை ஏழ்மை நிலைமையி லிருப்பவர்களும் வாங்கி வாசித்து இன்புற வேண்டுமெனக் கருதி, கீழ்க்கண்ட பங்குகளாகப் பிரித்து விலைகளை மிகவும் குறைத்ததுடன், தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். முன் பணமாகத்தான் அனுப்ப வேண்டும். வி. பி, கிடையாது.

தபாற் செலவு இனாம்

**பங்கு 2**
**ரூ. 3-8-0**
வைதேகி
ருக்மிணீகாந்தன்
சுகந்த புஷ்பம்

இந்த அரிய தருணம்
மார்ச்சு மாதக்கடைசி
வரையில் தான்.

**பங்கு 5**
**ரூ. 3.**
ராதாமணி
ஸாரமதி
நளினசேகரன்

மேற்கண்ட பங்குகளாக இல்லாமல் வெவ்வேறு புத்தகங்கள் வேண்டியவர்கள் ஏழரை ரூபாய் பெறுமான புத்தகங்களுக்கு ஐந்து ரூபாய் அனுப்பினுல் அவற்றைத் தபாற் செலவின்றி அனுப்புவோம்.

**பங்கு 3**
**ரூ. 3-4-0**
நவநீதகிருஷ்ணன்
பரிமள கேசவன்
உத்தம சீலன்
மூன்று வைரங்கள்

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோட்டத் தெரு
திருவல்லிக்கேணி.

**பங்கு 6**
**ரூ. 2-4-0**
கதம்பமாலை
சோதனையின் கொடுமை
வீரவஸந்தா

182963.

## 5-வது அதிகாரம்

## கருணை வள்ளல்—தருணியின் யோகம்

தற்காலத்தில் கலியுகக் கர்ணனாக விளங்கும் சர்வோத்தமரின் கட்டுண்ட நிலைமையை அறிந்த ஏனையோரும் அலறித் துடித்தார்கள்; வீடு அல்லகல்லோலப்படுகிறது. வேலையாட்களின் கட்டுக்களை யவிழ்த்து விட்டார்கள். எல்லோருமாக எஜமானன், எஜமானியம்மாளின் கட்டை அவிழ்த்துவிட்டு முகத்தில் ஜலம் தெளித்து உபசரித்தார்கள். சிறிது நேரத்தில் இருவரும் கண் திறந்து ப்ரக்ஞையடைந்து பார்த்தார்கள்.

வேலையாட்கள் இவர்களுக்கு முதலில் சிறிது ஆகாரம் கொடுத்தார்கள். சர்வோத்தமர் எழுந்ததும் முதலில் தனக்கு உயிரான ஸ்வாமி விக்கிரகம் இருக்கிறதா என்று பார்த்தார். அங்கு விக்ரகத்தைக் காணவில்லை. மனந்தவித்துத் துடித்தார். "ஐயோ! பரம பக்தரான ஸ்ரீத்யாகராஜருக்கு ஏற்பட்டதுபோல மகா பாபியாகிய எனக்கும் சோதனை வந்துவிட்டதே! ஹா! க்ருஷ்ணா!" என்று அலறினார். தம் வேலையாட்களை நோக்கி "நீங்கள் இவ்விஷயத்தை விதை விதைக்கவேண்டாம். ஈசனின் திருவுள்ளமிதுபோலும். என்னுடைய அனுமதியின்றி யார் போலீஸாரைத் தருவித்தார்கள்?" என்றார்.

---

ஒரு மனிதரின் நாதியற்ற தன்மையை யறிந்து தாமே உதவி செய்ய முன் வராவிடினும் அவர்களைக் கேட்ட பிறகுகூட மரியாதையாக நடந்து கொள்ளாது விதண்டா வாதஞ் செய்து தமது அசட்டுத்தனத்தால் விழிக்கும் உதவாக் கட்டைகள் எத்தனையோ கிடக்கின்றன.

சமையல்காரன் நடுநடுங்கிப்போய் நடந்த சகல விஷயங்களை யும் விளக்கி "அவர்கள் உண்மைப் போலீஸாரல்ல; போலிப் போலீ ஸார் தான்" என்று கூறிவிட்டான். இதைக் கேட்ட உத்தமருக்கு ஒருவாறு தெளிவு உண்டாயிற்று. "சரி இனி இதைப்பற்றி வெளி யிடலாகாது. ஜாக்கிரதை." என்று கூறிவிட்டார்.

இதைக் கேட்ட வேலைக்காரர்கள் இப்படியும் அநியாயம் நடக் குமா! இதைத் தெரிவிக்காமலிருந்தால் நமது பொருள் வருவ தெப்படி? எஜமான் அவர்களே! தாங்கள் தயவு செய்து இவ்விஷ யத்தில் எண்ணத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். நமது பகைவர்கள் வேண்டுமென்றே இந்தக் கொள்ளையை நடத்தி யிருக்கவேண்டு மென்று நன்றாகத் தோன்றுகிறது. ஆகையினால் நீங்கள் பேசாம லிருப்பது கூடாது" என்று காலில் விழுந்து வேண்டினார்கள்.

மிகவும் சாந்த ஸ்வரூபியாகிய சர்வோத்தமர் அவர்களை நோக்கி, "அப்பா! நீங்கள் இவ்விதம் ஆத்திரப்படுவது கூடாது. கடவுளின் கட்டளை எப்படி எப்படி இருக்கிறதோ அப்படியேதான் சகலமும் நடக்கும். அவனுடைய ஆக்கினை இதுபோலும். ஆகையால் நான் இதற்கு எதுவும் செய்யக்கூடாதென்று பகவானின் ஆக்கினை இருக் கிறது. என் குருநாதரும் அங்ஙனமே உபதேசித்திருக்கிறார். அந்தப் பொருள் அக் கொள்ளைக் கூட்டத்தினருக்குச் சேரவேண்டிய தென்று கடவுளின் ஆக்கினைபோலும். அது சென்றுவிட்டது. இனி இதைப்பற்றிப் பேச்சே வேண்டியதில்லை. என்னுயிருக்கு உயிரான விக்கிரகம் பறி போனதொன்றுதான் என் மனத்தில் பாதிக்கின் றது. அதையும் நான் அடக்கியே இருக்கவேண்டும். நீங்களெல்லோ ரும் பேசாமலிருக்கும்படி நான் வேண்டுகிறேன்" என்றார்.

இதற்குமேல் வேலையாட்கள் என்ன செய்வார்கள்? வருத்தத் துடன் போய்விட்டார்கள். ரங்கமணியம்மாளின் மன அதிர்ச்சி

---

சில வைத்தியர்கள் தங்களிடம் வரும் நோயாளிகளிடம் "இது மிக வும் பலமான வியாதி; சற்று அஜாக்ரதையாக இருந்தால் கண்ணையும், காதையும் கொண்டு போய்விடும்" என்று கடுக்காய் கொடுத்துக் கவலை யைப் பெருக்கி விடுகிறார்கள். மற்றும் சிலரோ வியாதி எவ்வளவு கடின

வாங்கவே இல்லை. அதனால் மிகவும் தாக்கப்பட்டுவிட்டாள். உத்தமர் தன்னுடைய கிருஷ்ண விக்கிரகம் போய்விட்ட அதிர்ச்சியால் மிகவும் பாதிக்கப்பட்டவராய் ஆகாரமும் கொள்ள மனமின்றி உட்கார்ந்திருந்தார். அச்சமயம் அவருடைய குருவினிடமிருந்து ஓர் ஆள் வந்து "நாளைக்கு மடத்தில் குரு பூஜை நடக்கிறது. அப்போது சுமார் 500 பேர்களாவது சாப்பிடுவார்களாம். இதைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமாய்க் குருநாதர் சொல்லி யனுப்பியுள்ளார். தங்களையும் அம்மாளுடன் வரச்சொன்னார்" என்றான்.

இதைக் கேட்டதும் உத்தமர் சற்றும் தியங்காமல் ஓர் ஆயிரம் ரூபாயிக்கு செக்கு ஒன்று எழுதி யனுப்பிவிட்டுத் தானும் ரங்கமணியும் ஸ்நானம் செய்துவிட்டு, மடத்திற்குச் சென்று குருநாதரை வணங்கி நின்றார். உத்தமரின் முகமாறுதலைக் கண்ட குருநாதர் "உத்தமா! என்ன முகம் ஒருவாறாக விருக்கிறது. உடம்பு ஏதேனும் அசுகமா?" என்றார்.

உத்தமரும் முன் தினம் நடந்ததை ஒன்று விடாது கூறிப் பின்னர் "எனக்கு மற்ற எந்த விஷயத்திலும் வருத்தமென்பதே இல்லை; எனது விக்கிரகத்தை மட்டும் இழக்க மனந்துணியாது அஜ்ஞானம் சூழ்ந்து அலையச் செய்தது. அதுதான் மாறுதலுக்குக் காரணமாக விருக்கும்" என்றார்.

இதைக் கேட்ட குருநாதர் ஒருவாறு நகைத்துவிட்டு வேதாந்தத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற உன் மனமா இவ்விஷயத்தில் அதிர்ச்சி யடைந்தது? அந்த விக்ரகத்தை நீ பிறக்கும்போது கொண்டுவந்தாயா! அல்லது போகும்போதுதான் கொண்டுபோகப் போகிறாயா! இரண்டும் இல்லையே! நீ பரம வேதாந்தி; த்யாக சிந்தனை ஊற்று பெற்றவன் என்றல்லவோ நினைத்தேன்! இன்னமும் பரிபக்குவப்படவில்லையா?" என்றார்.

---

மாக இருந்தாலும் "இதைப் பற்றி பயப்பட வேண்டாம்; சீக்கிரத்தில் குணமாய் விடும்" என்று தைரிய மொழி கூறுகிறார்கள். இவ் விருவகை யோரில் யார் முன்னுக்கு வருவார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமா?

இதைக் கேட்ட உத்தமருக்கு மிக்க வருத்தமும் வெட்கமும் உண்டாய்விட்டது. "குருநாதா! மன்னிக்கவேண்டும். நான் செய்தது மிகவும் அபசாரம். நான் ஓர் த்யாகி என்று பெயர் கொண்டு இவ்விதம் விசனிப்பதால் வேஷம் போடும் கபடியைப்போலவே யாகிறேன். நான் அந்த விக்ரகத்தினிடத்தில் வைத்த பக்திக்காக இந்த விதம் சொல்லிவிட்டேன். என்னுடையதென்பது எதுவுமே இல்லை. இக் கலி காலத்தில் இந்த தத்வத்தை நம்பமாட்டார்கள்; எனினும் உங்களுடைய பொன் மொழிகளால் உபதேசம் பெற்றதன் பயனாக என் வரையில் நான் நம்புகிறேன். க்ஷமிக்க வேண்டும்" என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

பிறகு அன்று நடந்த குரு பூஜையில், பஜனையில் தம்பதிகள் கலந்துகொண்டு உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள்: வெகு விமரிசையாய் யாவும் நடந்தேறிய பிறகு போஜனம் முடிந்ததும் தம்பதிகள் குருநாதரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தம் வீட்டிற்கு வந்தார்கள்.

இவர்கள் வரும்போதே வீட்டிலிருந்த வேலைக்காரர்கள் பெருமகிழ்வோடு பெரிய ஆரவாரம் செய்து "எஜமான்! எஜமான்! வேடிக்கை, வேடிக்கை! இக் கலி காலத்திய வேடிக்கையைக் கூறவே திறமன்று. இதோ பாருங்கள்; உங்கள் உயிருக்கு உயிரான விக்ரகம்! கிருஷ்ண மூர்த்தி!" என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட உத்தமருக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. வேகமாக ஓடி பூஜை அறையில் பார்க்கையில் இரவு தாம் பறிகொடுத்துவிட்ட விக்கிரகம், படம் முதலிய யாவும் அப்படியே புஷ்ப மாலையுடன் பிரகாசமாக விளங்கியதைக் கண்டு மெய்ம் மறந்து "கிருஷ்ணா!" என்று கூவியவாறு பரவச மடைந்தார்; ஆநந்தக் கூத்தாடினார். இரவு களவு போன சகல பொருள்களும்

---

இந்த பிப்ரவரி மாதம் ஒரு சாராருக்கு சந்தோஷத்தையும், ஒரு சாராருக்குக் கஷ்டத்தையும் கொடுக்கின்றது. மாதச் சம்பளம் வாங்குவோர்களுக்கு 28 தேதியுள்ள இம் மாதம் மிக மகிழ்ச்சி யளிக்கும். கூலி வேலை செய்வோருக்கு இம்மாதமேனும் இரண்டு மூன்று நாளைய உழைப்பு

அந்தந்த விடத்தில் அப்படியே இருத்தலைக் கண்டு "இதென்ன செப்பிடு வித்தையா? கண்கட்டு வித்தையா? மாயா ஜாலமா! ஒன்றும் புரியவில்லையே! இதென்ன வேடிக்கை!" என்று ஆச்சரியக் கடலில் மூழ்கினார்கள்.

ஸ்ரீ கிருஷ்ண விக்ரகம் வைத்திருந்த விடத்தில் ஓர் கடிதம் இருப்பதைக் கண்டு உத்தமர் அதை எடுத்து வியப்புடன் படிக்கலானார்.

"தியாக மதியையுடைய உத்தமா!

உன்னுடைய கனவிலும் நீ இவ்விதம் நடக்குமென்றும்—அதிலும் நான் இக் காரியத்தைச் செய்வேனென்றும்—நினைத்திருக்க மாட்டாய். உத்தமா! நீ இச்சிறு பிராயத்தில் துறவறம் கொள்ள விரும்பிப் பலதரம் என்னிடம் கேட்டதை மறந்திருக்கமாட்டாய். துறவறம் கொள்வதென்பது சாமான்யமல்ல வென்று உன்னோடு தர்க்கம் செய்தபோது நீ உறுதி மொழிகளை எனக்களித்து, உனது பற்றற்ற தன்மையையும் விளக்கினாய்! அந்த பரிபக்குவம் உன்னிடம் ஆழமாக விருக்கிறதா என்பதைச் சோதிக்கும்படி கடவுள் எனக்கு ஓர் புத்தியளித்து ஆக்ஞாபித்தார். அதைச் சோதிக்கும் பொருட்டே—உன் மனோ உறுதியை நன்றாக அறியும் பொருட்டே—நேற்றிரவு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நானே செய்வித்து உன்னைப் பரீக்ஷித்தேன்; மெத்த சந்தோஷ மடைந்தேன். விக்கிரக விஷயத்தில் உனக்குள்ள பாசம் இருவகைப்பட்டது என்பதையறிந்தேன்: நீ விரும்பும் துறவறத்தைவிட உனது மனோ வேகத்தை இப்போது நீ ஏழைகளுக்குச் செய்யும் ஊழியத்தை விட இன்னும் அதிகமாக உழைக்கத் திருப்ப வேண்டும். அப்போது நீ துறவறத்தில் அடையும் இன்பத்தைக் காட்டிலும் பன்மடங்கு

---

குறைந்த கூலி கிடைக்குமே என்ற சந்தோஷம். வட்டி வாங்கும் பேர் வழிகளுக்குக் கொண்டாட்டம். இன்னும் இது போன்ற எத்தனையோ பேர்களுக்குச் சந்தோஷம். ஆனால் வட்டி கொடுப்போருக்குக் கஷ்டம்; பத்திரிகை யனுப்புவோருக்கு "தேதி குறைந்து விட்டதே! வேலை சீக்கிரம்

அதிகம் பெறுவாய். நீ உலகிலிருப்பது உனக்காக வல்ல. உழைப்பதும் உனக்காகவல்ல. உண்பதும் உனக்காகவல்ல: சகலமும் பிறர் பொருட்டுத் தான் நடக்க வேண்டும் என்ற பரி பக்குவத்தை நீ அடைதல் வேண்டும். அப்படி தனக்கென வாழாதவனே கடவுளின் உண்மையான பக்தர்களில் ஒருவ ஞவன். சாயுஜ்ய பதவியை யடையும் உரிமையைப் பெறுவான். என்னை நீ முற்றிலும் நம்பி யிருப்பதற்காக உனக்கு வேண்டிய பரத்தின் சாதகத்தை உபதேசிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன் என்கிற உரிமையினுல் உனக்கு இதைக் கூறுகிறேன். ஏழைக ளின் அன்பனுய் அவர்களுக்குக் கல்விதானம், அன்னதானம், வஸ்திரதானம் முதலியவற்றை நீ செய். உன் அன்னை தன் தந்தையைக் காக்கும் பொருட்டுத் தன் வாழ்க்கையையே தியா கம் செய்து, உன்னையும் உலகிற்கு ஈன்று, உதவி, பொருளையும் சேர்த்து வைத்துச் சென்றதன் பயனை நீ மேற்குறித்ததன் மூலம் அடைவதோடு உன் தாயாரின் ஆத்மாவையும் சாந்தி பெறச் செய்யவேண்டும். ஆகையினுல் அந்த ஊழியத்தில் ஊக்கத் தைச் செலுத்துவாயாக. உன்னுடைய மனே பரிபக்குவ நிலைமை இன்னும் சற்று குறைவாகவே இருக்கிறது. அது விருத்தி பெறவேண்டிய வழியில் பழகு.

இங்ஙனம் உன் குரு,

சோக்கலிங்கம்.''

இதைப் படித்த உத்தமர் என்ன நிலைமையை அடைந்திருப் பார் என்று கூறவேண்டுமா? "என்ன வேடிக்கை! குருநாதரா இந்த சோதனை செய்தது! ஆஹா! கடவுளின் திருவிளையாடல்களின் வைபவ ஆநந்தங்களில் இதுவும் ஒன்றுபோலும்!'' என்று ஆநந்தக் கண்ணீர் விட்டார். ரங்கமணி யம்மாளுக்கும் மயிர் கூச்செறிந் தது. அவர்கள் மீண்டும் குருநாதரிடத்திற்கு ஓடிக் காலில் விழுந்து

---

ஆக வேண்டுமே!' என்கிற கவலை. வாடகை கொடுப்போருக்கு "இரண்டு மூன்று நாட்கள் குறைவாக விருந்தும் முற்றும் கொடுக்க வேண்டுமே!" என்கிற வருத்தம். இப்படியே பலவும்.

வணங்கி அன்னவரால் அனேக அரிய மொழிகள் உபதேசம் பெற்று வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள்.

நாளடைவில் இச் செய்தி எப்படியோ ஊர் முற்றும் பரவி விட்டது. இதைக் கேட்டுப் பலர் பல மாதிரியே பேசிக்கொள்ளத் தொடங்கினர்கள். இக்காலத்திலாவது இவ்விதம் மதியீனமாக இருப்பதாவது. அந்த ஆசாமிக்கு மூளை கலங்கிவிட்டதா அல்லது வேறென்ன வந்துவிட்டது. பழய சரித்திரங்களிலும், புராணங்களிலும் படிக்கும் கதையைப் போல சாமியார் சிஷ்யனை சோதிப்பதாம்; கொள்ளை யிடுவதாம்; திருப்பிக் கொடுப்பதாம். இதுவெல்லாம் இக் கலிகாலத்தில் நம்பக்கூடியதா? கட்டுக் கதையாக வல்லவோ இருக்கிறது. சாமியார், சாமியார் என்று கூறிக்கொண்டே இந்த உத்தமர் ஏமாறுகிறர். அந்த சாமியார் கபட சாமியாரோ, அர்ஜுன சாமியாரோ! யார் கண்டது?'' என்று சிலர் பரிகஸித்துப் பேசினர்கள்.

பின்னும் சிலர் "சாமியார் எப்படியாவது கிடக்கட்டும். அந்த உத்தமர்தான் கலியுகத்தில் கர்ணனென்று தன்னை உலகம் புகழும் படி ஏழைகளின் மீது வெகு பரிதாபம் காட்டி ஏதேதோ செய்கிறர் அல்லவா? அதற்குத் துணையாக, தாம் பெரிய துறவி யென்றும் எதிலும் பற்றில்லாத பெரிய கபீர்தாஸ், ராமதாஸ், தியாகராஜ ஸ்வாமி முதலியவர்களைப் போல பரம பக்தர் என்றும் உலகம் மெச்சும் பொருட்டு இந்த நாடகமும் நடித்திருக்கலாம். இப்படியெல்லாம் செய்தால் வெகு சீக்கிரத்தில் உலகம் இவரை நம்பிவிடுமல்லவா? இல்லாவிடில் கொள்ளைக் கூட்டத்தினரிட மிருந்து அறிக்கை வந்தால் எவன் சும்மா பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான். உடனே போலீஸுக்குத் தெரிவிக்க மாட்டானு? அலறி யடித்துக் கொள்ளமாட்டானு? வெற்றிலை பாக்கு தக்ஷிணையுடன் எடுத்து திருடனுக்கு பொருளைக் கொடுத்துவிட்டாராம்! அடாடாடா! என்ன கதை ஐயா இது?'' என்று வம்பளந்தார்கள்.

---

தமக்கு மிஞ்சிப் பாடுகிறவர்கள் கிடையாதென்று சிலர் தாமே முடிவு செய்வதோடு டாம் டாமும் செய்து கொள்கிறர்கள். ஆனல் ஒரு சபையில் பாட நேர்ந்தபோது பொது மக்கள் அளித்த அபிப்பிராயமென்ன? "இந்தப் பாட்டிற்கா இவ்வளவு ஜம்பம்?" என்பதே.

இன்னும் சிலர் "சார்! இதில் பெரிய மர்மம் கூட இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இவர் தமது பெரிய உத்யோகப் பதவியில் கை நிறைய லஞ்சம் வாங்குவதாக ஓர் வதந்தி உலாவு கிறது; அந்த விஷயம் பொய்யாகிவிடும் பொருட்டு இவ்வித மெல்லாம் செய்துக் காட்டிவிட்டால் 'ஆகாகா! இத்தகைய தர்ம தேவதையா—பக்த சிகாமணியா, கடவுளையே நம்பிய தியாகியா—லஞ்சம் வாங்குவான்? இது சுத்தப் பொய்' என்று ஜனங்களும், மேலதிகாரிகளும் நம்பிவிடுவார்கள். பிறகு தம் ரகஸியம் மறைந்து விடும் என்ற நோக்கத்தினுல் சாமியாரின் துணையைக் கொண்டு இந்த நாடகம் நடித்திருக்கலாம்" என்று குத்தலாக கூறினுர்கள்.

கடவுள் என்பதிலும், சத்தியத்திலும், பக்தியிலும் நம்பிக்கை கொண்டவர்கள் ஆயிரத்தில் ஒருவர் இக்கலியில் இல்லாமற் போகமாட்டார்கள். அத்தகைய கோஷ்டியினர் இந்த விசித்திரச் செய்கையில் நம்பிக்கையே கொண்டார்கள். அவர்கள் மேற்படி யாரை நோக்கி, "ஐயா! உலகம் பலவிதம். எது உண்மை, எது வீண் பேச்சு. என்பதையே நாம் நன்கறியமாட்டோம். அங்ஙன மிருக்க அனுவசியமாக ஏன் ஒருவரைப் பற்றி பலவிதம் தூஷணை யாகக் கூறவேண்டும்? உத்தமரின் குணவிசேஷத்தை நன்கறிந்தவர்கள் இப்படிக் கூறவே மாட்டார்கள். அவருடைய விரோதிகள் பலவித மாக த்வேஷங் கொண்டு பணத்தின் பகைமையினுல் தாறுமாருக உளறுகிருர்கள்.

உண்மையில் உத்தமர் என்கிற பெயருக்கு அவர் முற்றிலும் இலக்கானவரே யாவர் என்பது எங்கள் துணிபு. ஏழைகளுக்கு அவர் சரீரத்தைச் செருப்பா யுழைக்கிருர் என்பது உலகமறிந்த விஷயம். இக்காலத்தினர் நம்பினுலும் நம்பாவிடினும் அவர் மனச் சாட்சிக்குப் பொதுவாகக் கடவுள் மீது நம்பிக்கையுடன் உழைத்து

---

பசியில் பல தினுசு. உண்மையாகவே பசி எடுப்பதொன்று. பசித்தா லும் பசிக்கா விடினும் அந்த நேரத்திற்குச் சாப்பிட்டு விடவேண்டும் என் கிற எண்ணத்தினுல் உதிக்கும் பசியொன்று, பக்ஷண பலகாரங்களை எல் லாம் பார்த்த உடனே அவற்றைத் தின்னவேண்டு மென்கிற ஆசையால்

வருகிறார். எந்த ஜனங்கள் எப்படிச் சொன்னால் என்ன? கடவுளின் கிருபைக்கு அவர் பாத்திரமாவார். என்பது நிச்சயம். வீணைக் காலத்தைக் கடத்தும் மனிதர்களுக்கு வீண் வம்பு பேசுவதைத் தவிர வேறு தெரியாது. வேறு விஷயத்தில் ருசியும் அவர்களுக்கு ஏற்படாது. இது கண்கூடாகக் காணும் அநுபவம்.

ஒரு நல்ல காரியத்தைச் செய்ய யாரேனும் புறப்பட்டால் அதற்கு நாலாயிரம் விக்கினம் செய்யவும், வம்பு பேசவும் அவர்களின் உற்சாகத்தைக் குலைக்கவும் மனிதர்கள் கூட்டங் கூட்டமாகத் தோன்றுவார்கள். இந்த வீண் அரட்டலை விட்டு அவர்களுடன் ஒத்து உழைத்தால் அதனால் பலன் உண்டா இல்லையா என்பதைக் காணலாம். அவ்வளவு பொறுமை நம்மவரிடம் ஏதய்யா! சாஸ்திரம் இன்னதென்றும், விவகாரம் இன்னதென்றும், விஷயம் இன்னதென்றும் அறியாத கட்டைகளெல்லாம் நல்ல காரியத்தைக் கெடுப்பதற்காக மேற்குறித்தவற்றைக் கரை கண்டதுபோலப் பேசிக் கக்ஷிப் பிளவுகளை உண்டாக்கி உருக்குலைய வைக்கும் இக்காலத்தில் தெய்வ நம்பிக்கையுடனிருக்கும் உத்தமரைப் பரிகஸிப்பது வியப்பா!

அந்த சன்யாசி இக்காலத்திலுள்ள சில சன்யாசிகளைப் போல வேஷக்காரச் சாமியார் அல்ல. அவருடைய சரித்திரத்தை யறியாது வீணை ஓர் மகானைப் பற்றி அவதூறாக ஏனையா பேசுகிறீர்கள்? அவருடைய ஜீவிய சரித்திரத்தை நீங்கள் கேட்டால் இவ்விதம் உளறமாட்டீர்கள்.'' என்று உத்தமர் கக்ஷியில் சேர்ந்து பேசுவதைக் கண்டு மற்றவர்களில் சிலர் நம்பியும், சிலர் இவர்களையே பரிகஸித்தும் சொல்லலானார்கள்.

தன்னுடைய வேலையைத் தவிர மற்ற எந்த விஷயத்தையும் என்றும் கவனியாத உத்தமர் தன் மனத்தில் கடவுள் என்ன ஆக்கினை இடுகிறாரோ அவ்வாறும்—தன் குருநாதர் கூறுகிற பொன்

---

உண்டாகும் இருட்டுப் பசியொன்று. மற்றவர்களுடன் சாப்பிட வேண்டும் என்கிற ப்ரியத்தினால் உண்டாவது ஒருவிதப் பசி. இதை இப்போதே சாப்பிடாவிடில் வேறு யாரேனும் தின்றுவிடப் போகிறார்களே என்கிற பொறாமை எண்ணத்தினால் உண்பது ஒரு கபடப் பசி. பிறருக்கு

மொழிகளின்படியும்—சத்தியத்தையும், தியாக புத்தியையும் துணை யாகக் கொண்டு நடப்பதில் ஒரு சிறிதும் பின்னடையவில்லை. சிலர் அவதூறாகப் பேசினாலும், பலர் இவரின் செய்கையையும், குணத் தின் மகிமையையும் போற்றிப் புகழ்ந்து இவரையோர் கலியுகக் கர்ணனென்றே நிச்சயித்துவிட்டார்கள்.

உத்தமர் தான் சாப்பிடும் ஆகாரத்தைத் தவிர மற்ற எதுவும் தனக்கென வைத்துக்கொள்வதையே வெறுத்தார். பல தரும காரி யங்களைச் செய்யலானார். "ஏழைகளென்ற பெயரே இல்லாது எல் லோரும் சமம் என்ற காலம் என்று வரும் ஈசா!" என்று ஏங்குவார்.

* * * *

தரும தேவதை என்றால் இக் கலியில் உத்தமரைத் தவிர மற்ற யாரும் கிடைக்க மாட்டார்கள். ஐயா! மகாலிங்கம்! தாங்கள் யாசிப்பதற்குத் (வியாபரிப்பதற்கு) தகுதியான இடம் அவ்விடந் தான். கலியுகக் கர்ணனென்றுதான் உலகம் அம் மகானைப் போற்று கின்றது. அவர் சாமானியரல்ல. பெரிய பதவியில் இருப்பவர். அவ ருடைய அருமையான குணத்திற்கு ஏற்றதுபோலப் பத்தினி வாய்த்துள்ள விநோதம் கூறத் திறமன்று. அவ் வுத்தமியின் நாம தேயம் ரங்கமணியம்மாள். கற்பகத் தருவானது நினைத்ததை நினைத்த மாத்திரம் எவ்விதம் கொடுக்குமோ, அதேபோல இவ் வம்மையாரின் வாயினால் இல்லை என்ற பதத்தை இந்த உலகத்தில் யாரும் கேட்டிருக்க மாட்டார்கள். பர்த்தாவின் நிழல் அந்த அம் மாள். அன்னவரின் உதடு அசைவதற்குள் அந்த அம்மாள் அது எத்தகைய காரியமாயினும் பூர்த்தி செய்து விடுவார்கள். மகா லக்ஷ்மி என்றால் அவர்களுக்கே தகும். என்னாலான உதவி அவர்க ளிடம் தம்மை யழைத்துச் செல்கிறேன் வாரும்" என்று கூறிய வாறு ஓர் வயோதிகர் மற்றோர் நடுத்தர மனிதரை உத்தமரின் வீட் டிற்கு அழைத்துச் சென்றார்.

காலை 7 மணி சமய மிருக்கும். உத்தமர் கடவுளுக்குப் பூஜை

---

எடுத்துக் கொடுக்கும்போதும் குழந்தைகளுக்குக் கலந்து போடும்போதும் தானும் வாயில் போட்டு மெல்லுவது ஓர் அல்பப் பசி. இவ்விதமே அனேக வித பசிகள் உண்டாகின்றன.

செய்து கொண்டிருந்தார். ரங்கமணி என்னும் மாதரசி தன் பதிக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு அவருக்குப் பக்கலி லேயே நின்றாள்.

அவர் எத்தகைய காரியத்தைச் செய்த போதிலும் ஏழைக ளின் துயரமும் கண்ணீரும் அவருடைய ஹ்ருதயத்தில் நன்றாகப் பதிந்து அவர்களின் தீனக் குரல் கேட்பதுபோலவே தோன்றும். அதனால் அவர் போஜனம் செய்து கொண்டிருப்பினும் அதை விட் டெழுந்து ஏழைகளைத் தமது சக்தியானுசாரம் திருப்தி செய்து விட்டுத்தான் மீண்டும் புசிப்பார். பூஜையிலிருப்பினும் ஏழைகளைக் கவனித்து உபசரிப்பதுதான் கடவுளின் உள்ளத்திற்கு உகந்த பூஜை என்ற தத்துவத்தை எண்ணி அவ்விதமே முதலில் செய்வார். அவ்வாறு செய்தாலே அந்த தம்பதிகளின் மனம் ஆநந்தப் பரவச மாகும். அதுதான் கடவுளுக்கும் ப்ரீதி என்பதே தேவ வாக்கு.

அன்று பூஜை செய்து கொண்டிருக்கையில் நாம் முற் கூறிய படி இருவரும் அவ்விடம் வந்தார்கள். அவர்களும் இங்கு நடக்கும் பூஜையின் மகிமையைக் கண்டு பரவசமடைந்து அதை ஆநந்த மாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பூஜை முடிந்த பின் தீர்த்தப் ப்ரசாதம் பெற்றுக் கொண்டு எல்லோரும் முதல் கட்டு ஹாலுக்கு வந்தார்கள்.

உத்தமர் உயர்ந்த பதவியிலிருப்பினும் அவருடைய நடக்கை யும், போக்கும் ஓர் பரம ஏழையைப் போலவே இருக்கும். ஆடம் பரம் என்பது அவரிடம் மருந்திற்கும் கிடைக்க மாட்டாது. சர்வ சாதாரணமான உடைகள், எல்லோரையும் சமமாகப் பார்க்கும் சமத்வ குணம் எல்லாம் ஒருங்கே பெற்ற அவர் வந்தவர்களை நோக்கி

---

வாயாடி வழக்குப் பேசுவதே தொழிலாகக் கொண்டவர்கள் சண்டை யறியாத சாதுக்களைக் காண நேரின், அவர்களோடு பழக நேரின் வெகு ஆச்சரியப் படுகிறார்கள். பலிதமில்லை என்று தெரிந்ததும் அவர்க ளுக்கு அறிவில்லை, பைத்தியம் என்கிற பட்டத்தை வெகு சுலபமாகக் கொடுத்து விடுகிறார்கள். இது வேடிக்கையிலும் வேடிக்கை யல்லவா?

ஆசனமளித்து அமரச் செய்து "என்ன விசேஷம்? தாங்கள் எந்த ஊர்? எங்கு வந்தீர்கள்?" என்று கேட்டார்.

வந்த மனிதர்களின் காவி வஸ்திரமும், சன்யாசிக் கோலமும் விபூதியின் தடபுடலும் சிவப் பழம்போலப் பிரகாசிக்கச் செய்தன. அவர்கள் உத்தமருக்குப் பிரதி வந்தனம் செய்ததும், ஒருவர் "இவ்விடத்தில் தர்ம தேவதையே உருக் கொண்டு தமது வடிவ மூலமாக வந்திருப்பதை யறிந்தேன். அடியேன் மனத்தில் வெகு நாட்களாக ஓர் யோசனை யுண்டு. அதற்குத் தக்க சகாய கர்த்தர்கள் கிடைக்காமையினால் அடியேன் எண்ணம் ஈடேற வில்லை. அந்தக் காரியம் பூர்த்தி பெறுவதக்குக் கடவுள் தங்களைக் காட்டினார் என்றே நினைக்கின்றேன். அடியேனுடைய சொப்பனத்தில் ப்ரதி தினமும் சிறு குழந்தைகள் "பால் கொடுங்கள்; பால் கொடுங்கள்" என்று கேட்கின்றன. அடியேனோ செல்வத்தில் தரித்திர நாராயணன். என் மனத்திலுள்ள ஆவல்படிக்கு சில பசுக்களை வாங்கிப் பால் கறந்து தினம் ஏழைக் குழந்தைகள் சிலருக்குக் கொடுக்க நினைத்துள்ளேன். அதற்குத் தம்மாலான உதவியைச் செய்ய வேண்டும்". என்றார்.

உத்தமர்:—ஐயா! இக் காலத்தில் எத்தனையோ பேர்கள் தர்மம், தர்மம் என்று கூறிக் கொண்டே யாசகத்திற்கு வருவது கணக்கில்லை. அவர்களை எல்லாம் நம்புவதற்கும் மனம் துணியவில்லை. காலத்தின் கோலம் அவ்வாறிருக்கின்றது. சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. திருட்டும், புரட்டுமே கையாளும் கபடர்கள் யாசகர்களாக வந்து மயக்குகிறார்கள். எத்தனை விதமான நய வார்த்தைகள் பேசி மயக்கக் கற்றிருக்கிறார்கள் என்பதைக் கூறவே திறமன்று—என்றார்.

வந்தவர்:—ஐயா! தாங்கள் கூறியதில் எள்ளளவும் தப்பிதமில்லை. நான் இத்தகைய மோசக்காரப் பாவிகளை வேண்டிய வரையில் பார்த்

---

வக்கீலுக்குத் தன் பெண்ணைக் கொடுப்பதற்கு முன்பு பெண்ணின் தாயார் "என் மகளுக்கென்ன குறைவு, மாப்பிள்ளையோ வக்கீல். கக்ஷிக்காரர்கள் ஆயிரம்பேரிருப்பார்கள். பாலும் தயிரும் நெய்யும் காய்கறியும் அவர்கள் ஏராளமாய்க் கொடுப்பார்கள். அப்போது நாங்களும் அதில்

திருக்கிறேன். என் கண் முன்பே ஒரு மனிதன் பெரிய கைங்கரியம் செய்வதாகக் கூறித் தம்மைப் போன்ற மகானிடத்தில் பணத்தைப் பெற்றுச் சென்று அடுத்த நிமிடமே துர்வினியோகப் படுத்தியதைக் கண்ணுறக் கண்டேன். ஸ்வாமிக்கு உத்ஸவம் செய்வதாயும், திருவாபரணம் செய்வதாயும் அடியார்களுக்குச் சமாராதனை செய்வதாயும் அனேகர் தோன்றியவாறெல்லாம் கூறி யாசகம் செய்து, அந்தப் பொருளை சொற்படி செய்யாமல் வீண் செலவிடுதலைக் காண சகிக்கவே கூடாது போகின்றது. தானமென்றால் சாமான்யமா! அதைப் பாத்திர மறிந்து பிச்சை இடுவதுதான் உசிதம். சுவாமிக்கு அடியேனிடத்தில் அத்தகைய சந்தேகம் ஏதும் வேண்டாம். மீனாட்சி அம்பாள்மீது ஆணையாக நான் ஏழைக் குழந்தைகளின் பால் விஷயமான கைங்கரியத்தையே நாடி வந்துள்ளேன்.

உத்தமர்:—உலகத்தில் எல்லோருமே பாதகர்களாக இருப்பார்களா! தர்ம சிந்தை தாதாக்களும் இருக்கின்றார்களல்லவா—என்று கூறி, அதற்குமேல் அனாவசியமாய்ப் பேச்சை வளர்க்காமல் தமக்குத் தோன்றிய பொருள்களைக் கொடுத்து அனுப்பினார். யாசகரும் பெற்றுச் சென்றுவிட்டார்.

நமது உத்தமர் வாசம் செய்வது பெரிய பட்டிக்காடு மன்று; பட்டணமும் அன்று. ஆதலால் அங்கு சில பள்ளிக்கூடங்களும் ஆபீஸ்களும் இருந்தன. அங்கு பெண் குழந்தைகளுக்கென்று பிரத்யேகமான பள்ளிக்கூடம் வேண்டுமென்று அனேகர் விரும்பியதாலும், ஏழைப் பெண்கள் எல்லாம் அநியாயமாய்ப் படிப்பின்றிப் பாழாகி விடுகிறார்கள் என்கிற நோக்கங் கொண்டும் ஓர் தினம் உத்தமரும் ரங்கமணியம்மாளும் யோசனை செய்து ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தத் தீர்மானித்தார்கள். அதற்கான சகலமான செலவும் தாமே ஏற்றுக்கொள்வதென்றும் தமக்குள் முடிவு கட்டி, தமக்குள்ள பெரும் பொருளில் ஒரு பகுதி இதற்கு என்று ஒதுக்கிவிட்டார்கள்.

---

மிதக்கலாம்" என்று பேசி மகிழ்ந்தாள். விவாகமான பிறகோ ஒரு கஷியையும் காணவில்லை. அப்படி ஒருவன் வந்தால் அவனுக்குப் பாலும் தயிருமாக இவர்களே சாப்பாடு போட்டுத் தன் மதிப்பை—ஜம்பத்தைக்—காட்டவேண்டியதா யிருக்கிறது. என்ன வேடிக்கை இது!

அந்த பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து அதைத் திறந்து வைக்க ஓர் சுபதினம் பார்த்து ஓர் பெரிய திருவிழா நடத்துவது போல அதைத் திறந்து வைத்தார்கள். அத்தினத்தில் அளவற்ற ஏழைப் பெண்கள் வந்து சேர்ந்தார்கள். அப்பள்ளிக் கூடத்திற்கு "ஜயபாரதித் திருநிலையம்" என்ற நாமகரணமும் சூட்டப்பட்டது. ஸரஸ்வதி பூஜை கடந்த மறு தினம் வித்யாரம்பத்திற்கு ஏற்ற நாளாகிய விஜயதசமியில் அந்த பள்ளிக்கூடம் திறக்கப் பட்டதுடன் கல்விச் செல்வத்தின் கர்த்தாவும், பொருட் செல்வத்தின் கர்த்தாவும் ஆகிய நாமகள் பூமகள் இருவரின் பெயராலும் திறக்கப்பட்ட அப் பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியைப் பற்றியும் அது இனி எவ்வாறு நடைபெற வேண்டுமென்பதைப் பற்றியும் அனேகர் பேசியதோடு அத்தகைய தர்ம ஸ்தாபனத்தைச் செய்ய முன் வந்த நமது உத்தமர் தம்பதிகளின் குண விசேஷத்தையும், தர்ம சிந்தையின் மகிமையையும், ஏழைகளின் பால் அளவு கடந்து அன்பு கொண்டுள்ள பெருந் தன்மையையும் பலர் பலவாறு புகழ்ந்து கூறி "அத் தம்பதிகளுக்கு நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும், தீர்க்காயுளையும் எல்லாம் வல்ல சர்வேச்வரனும், பாரதியும், திருமகளும் அளிக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்" என்று வாழ்த்துக் கூறினார்கள்.

அதன் பிறகு நமது உத்தமர் பேசத் தொடங்கினர். "என் ஆத்மநேய அன்பர்களே! கனவான்களே! ஏழைச் சிறுமிகளே! எல்லோருக்கும் மேல் இருப்பவன் இறைவன் ஒருவனே! அந்த இறைவன் ஒருவனின் ஆட்சியின் கீழ்தான் உலகமே அடங்கி இருக்கின்றது. அந்த ஆட்சியாளனாகிய தலைவன் நம்மை எல்லாம் இவ்வுலகத்தில் நாம் செய்த பாப புண்ணியத்திற் கேற்றவாறு பல் வேறு பிரிவினைகளுடன் பிறப்பித்துள்ளான். அவனுடைய சூத்திரக் கயிற்றி

---

பெண்கள் சுலபமாகக் கிடைக்கும்போது பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்வதில்லை. இவர்கள் கல்யாணம் செய்துகொள்ள எண்ணித் தேடினாலோ பெண்கள் கிடைப்பதில்லை. சிலருக்கு இம்மாதிரி பிள்ளையார் கல்யாண மாகிவிடுகின்றது. ஒரு சிலருக்குத்தான் விவாகமாகின்றது.

லாடும் பம்பரமாகிய நாம் அவன் எப்படி ஆட்டுகிருனே, எவ்விதம் நடத்துகிருனே அவ்விதம் நடக்கவேண்டிய பொம்மைகள்தாம்.

நாம் என்பதும், நம்முடைய தென்பதும் ஏதுமே கிடையாது. மனித வர்க்கத்திற்கு அந்த மாதவன் இட்டுள்ள கட்டளையின்படிக்கு அவனடிமையாகிய என்னைக் கொண்டு நடத்திக்கொள்கிருன். கேவலமான எனக்கு அன்பர்கள் இதுகாறும் கூறிய புகழ்ச்சிகளை எல்லாம் அன்றலர்ந்த நறுமணங் கமழ்ந்த மலராக்கி அந்த அகிலாண்டகோடிப் பிரம்மாண்ட நாயகனின் சரணங்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். மனிதருக்கு மனிதர் தோத்திரம் செய்வது பிசகு. அவரவரின் கடமைகளைச் செய்ததாக எண்ணி அதை பகவானுக்கு ஒப்புவித்துவிட வேண்டும்; ஆதலால் இந்த புகழ்ச்சிகள் ஏதும் நான் வேண்டிலேன்.

நான் சிறுமிகளுக்கு இங்கு கூறவேண்டிய விஷயம் ஒன்றே யுள்ளது. அதாவது, நீங்கள் எல்லோரும் முக்கியமாக முதல் கடமையாகச் செய்ய வேண்டுவது யாதெனில் பகவத் பக்தி, தெய்வ நம்பிக்கை. கடவுள் ஒருவன் இருக்கிருன். "அவனன்றி ஓரணுவும் அசையாது" அவனை நம்பி நாம் அவன் இட்ட கட்டளையைச் செய்வோம் என்று நீங்கள் ஒரே உறுதியான எண்ணம் பூண்டு அதன்படி பிரார்த்தனை செய்து உங்கள் கடமைப்படிக்கு நடவுங்கள். குழந்தைகாள்! உங்களைப் பெற்ற தாய்தந்தையர்கள் கண்ணிற்குத் தென்படும் தெய்வங்களாக விருப்பினும் கண்ணிற்படாத தாய்தந்தைகள் இருக்கிருர்கள். அவர்களிடத்து நீங்கள் முக்கியமாக பக்தி செய்து, நன்ருகப் படித்து நல்லறிவைப் பெறுங்கள்.

நான் இந்த தொழிலை மேற்கொண்ட நாள் முதல் கிராமாந்திரங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்ததால் அங்குள்ள மக்கள் ஆண் பெண்பாலர்கள் கல்வியறிவின்றி அநாகரிகமாய், அறிவற்று இருப்பதையும் அவர்களுக்குப் பிறந்த மக்களையும் அங்ஙனமே சீர்

பார்ப்பதற்கு அற்ப மனிதராகத் தோன்றுபவர்களை படாடோபமான பெரிய மனிதர்கள் லக்ஷியம் செய்வதில்லை. அற்ப மனிதர்களாக எண்ணியவர்களுடைய செல்வத்தின் நிலைமையையும், குடும்பவரலாற்றினை

கேடாக நடத்தும் கோரங்களேயும் நேரில் கண்ணுற்றேன்! கல்வி யறிவு இன்மையினல் மூர்க்க குணமும், சுசியற்ற தன்மையும், பிடிவாத குணமும், கோணல் வழியில் நாட்டமும் சிறு பிராயம் முதல் குழந்தைகளுக்கு ஊன்றிவிடுகின்றன. இதற்கு உதாரணம் ஒன்று கூறுகிறேன்.

நான் நிலவரி வசூல் சம்பந்தமாய் ஒரு கிராமத்திற்குச் சென்றிருக்கையில் அங்கு தெருக்கூத்து ஒன்று நடந்தது. அந்த தெருக்கூத்திற்குப் போவதற்காக ஓர் பெண்பிள்ளே தன்னுடைய மூன்று வயது குழந்தையையும், 5 வயது பெண்ணேயும் இழுத்து நிறைய கள்ளேப் பலவந்தமாகப் போட்டி ஓர் அறையில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு நிம்மதியாகப் போய்விட்டாள். குழந்தைகள் தன்னே உபத்திரவம் செய்யாதிருப்ப தொன்றை மட்டும் கவனித்து அவைகள் மயங்கிக் கிடக்கவேண்டுமென்று மடமையினல் கள்ளே ஊத்திய அறிவை என்னென்பது? நாடகம் பார்த்துவிட்டுப் பின்னர் விடியற்காலம் வந்து பார்க்கையில் இரு குழந்தைகளும் கள்ளின் வெப்பமும் குமட்டலும் தாங்காது பலவிடங்களில் வாந்தி எடுத்திருந்ததோடு உயிரும் நீங்கிச் சவமாகக் கிடந்தன. நேயர்களே! சிறுமிகளே! இந்த கோர சம்பவம் அறிவற்ற, கல்வியற்ற அன்னேயின் மடத்தன்மையினல் விளேந்ததன்ருே! கள் சிறு குழந்தைகளுக்குச் சகிக்குமா! கள்ளில்தான் என்ன கெடுதல் இருந்ததோ! அன்றி வாந்தி செய்து அழுது அழுதுதான் உயிர் துறந்தனவோ! கடவுளுக்கே வெளிச்சம்.

அறிவுள்ள அன்னேயாயின் ஏதோ தின்பண்டங்களேக் கொடுத்துக் குழந்தைகளே அழாமல் கவனிக்கமாட்டாளா! இது போன்ற அனேக சம்பவங்களேக் கவனித்தது முதல் நான் கிராமாந்திர ஜனங்களுக்கு முதலில் கல்வி யறிவு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கடவுள் உண்டாக்கினர். முதல் முதலாக இதைச் செய்து வைத்தார். இப்படியே பின்னும் செய்வார் என்று

---

யும் அறிந்த பிறகு விழுந்து விழுந்து விசாரித்துக் குலாவுகின்ருர்கள். இவர்கள் கண்ணுக்கு, முன்பு காட்டிய அலக்ஷியம் இப்போது மறைந்துவிடுகின்றது.

நம்புகிறேன்.'' என்று இன்னும் அனேக விஷயங்களைப் பேசிவிட்டு வந்துள்ளவர்களுக்கு வந்தனங் கூறித் தாம்பூலம் வழங்கி குழந்தைகளுக்குத் தின்பண்ட மளித்துக் கடவுள் மீதும், பாரதி மீதும், திருமகள் மீதும் பாடல்கள் பாடியபின் கூட்டங் கலைந்தது.

வளர்பிறை மதியம் போல பள்ளிக்கூடம் விருத்தி யடைந்து அனேக சிறுமிகள் சேர்ந்துகொண்டே வருகிறார்கள். பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிகள் எல்லோரும் வெகு அன்பாயும் ஆதரவாயும் சொல்லிக் கொடுத்து குழந்தைகளின் அறிவைப் பெருக்கிக் கொண்டே வருகிறார்கள். உத்தமரும் ரங்கமணியும் வாரா வாரம் வந்து பள்ளிக்கூடத்தைப் பார்வை யிட்டுக்கொண்டு போவது வழக்கம்.

அவர்கள் வழக்கம் போல ஒரு நாள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றார்கள். அச்சமயம் அப் பள்ளிக்கூடத்திற்கு எதிரில் கும்பல் கூடி இருந்தது. ஒரு பெண் குழந்தை அதிகமாக அழுகிறது. அதை யொரு கிழவி முதுகிலும், காலிலும், கன்னத்திலும் பளீர் பளீர் என்று அடித்தவாறு, "இனிமேல் போகமாட்டாயே! இனிமேல் போகமாட்டாயே! இனிமேல் சொல்கிறபடிக் கேட்பாயா! இனி வேலை செய்வாயா! தடிப்பிணமே! கழுதை! '' என்று தாறுமாறாகத் திட்டியவாறு கன்னத்தில் அறைகிறாள். அந்த குழந்தைக்கு சுமார் ஏழு வயதுதான் இருக்கும். அது இந்த அடியைத் தாங்க மாட்டாது "ஐயோ! இனிமேல் இல்லை. இனிமேல் இல்லை; விட்டு விடு.'' என்று துள்ளித் துள்ளி விழுகின்றது.

இந்த கோரமான சம்பவத்தை வேடிக்கை பார்க்கும் வீண் கூட்டங்களின் தொகை எண்ணில்லை. ஒருவராவது குழந்தையை ஏன் அடிக்கிறாய் என்று பரிந்து குறுக்கே செல்லாது ஏதோ இது ஒரு சினிமாக் காட்சி என்று நினைத்திருக்கிறார்கள் போலும். அவ்

---

பிச்சைக்கு வருகிறவர்கள் சாதாரணமாகப் பாடியோ, "ராமா, கிருஷ்ணா, சம்போ, நமசிவாயா!" என்று கூவியோ வாங்குவது வழக்கம். ஆனால் சிவர் வெகு சாமர்த்தியமாக வீட்டுக் குழந்தையை நோக்கி "உங்க அம்மாவைக் கூப்பிடு'' என்பதும், அவர்கள் யாரோ வேண்டியவர்கள்

வமய்ம் அங்கு வந்த உத்தமரும், ரங்கமணியும் இந்த கோர சம்பவத்தைக் கண்டு மனந் தாங்காமல் கூட்டத்தைக் கலைத்துக்கொண்டு ஓடினார்கள். ரங்கமணி குழந்தையைத் தூக்கித் தன் இடுப்பில் உட்கார வைத்துத் தன் துணியினால் அதன் கண்ணையும் முகத்தையும் துடைத்து "அழாதே! அழாதே!" என்று சமாதானம் செய்தாள்.

இதற்குள் உத்தமர் பெரிய மனிதர் என்று எல்லோருக்கும் தெரியுமாதலால் அங்குள்ளவர்கள் அயர்ந்து நிற்போரும், விலகுவோருமானார்கள். அந்த கிழவியை நோக்கி, "பாட்டி! நீ இத்தனை வயதை விழுங்கிப் பெரிய கிழவியாகி விட்டாயே! இந்த சிறிய குழந்தையை இத்தனை அடி அடிக்கின்றாயே! இந்த அடியை அது தாங்காது இறந்துவிட்டால் நீ என்ன செய்வாய்? கொலைப்பாதகமன்றோ உன்னைச் சூழும். நீ உன் பைசாச ஆவேசங்களை முற்றும் காட்டி அடிக்கும்படியான குற்றம் இந்த குழந்தை என்ன செய்தது சொல். நீ அதன் சொந்தக்காரியாக விருக்கலாம். இருப்பினும் அடிப்பதற்கு ஓர் எல்லை இல்லையா?" என்று கேட்டார்.

கிழவி அப்போதும் ஆத்திரத்துடன் பேசத் தொடங்கி "குழந்தையா! குழந்தை! கோட்டான்! பாவி முண்டையின் அதிர்ஷ்டம்தான் கல்போல விருந்த என் மகள் செத்தாள். இந்த எமனை என் தலையில் கட்டி எழவெடுக்க வைத்துவிட்டுச் சென்றாள். இப் பீடைக்கு சற்றும் புத்தி இல்லை. பயமில்லை. வீட்டில் ஒரு வேலை செய்வதில்லை. குட்டிச் சுவருக்கு ஆவதுபோல ஏழு வயது ஆயிற்று. இந்த ஏழு வயதில் நான் எத்தனையோ வேலை செய்தேன். என் மகள் மலையையே புரட்டுவாள். இந்த சனியன் எனக்கென்று வந்து சேர்ந்தது. இந்த பாழாப்போன இஸ்கோல் பள்ளிக்கூடம் இந்த தெருவில் வந்தாலும் வந்தது. எனக்கு அனர்த்தமாய்விட்டது. ஒரு ஸ்லேட்டு பலகையையும், பலபக் குச்சியையும்,

---

வந்திருக்கிறார்க ளென்று சமையல் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டு ஓடி வந்து பார்க்கையில் "அம்மா! கொஞ்சம் அரிசியோ, காசோ கொடுங்கள்" என்று கேட்பதும் வேடிக்கையா யிருக்கிறதல்லவா?

பொக்கு பொஸ்தகத்தையும் எப்படியோ இரவல் வாங்கிக்கொண்டு எந்நேரம் பாத்தாலும் இந்த பொண் பசங்களோடே சதா பள்ளிக்கூடத்திற்கு ஓடிவிடுகிறாள். இவள் கெட்ட கேட்டிற்குப் பள்ளிக்கூட மென்ன வென்கிறேன். இவளுக்குப் பிண்டம் போடுவதற்கே நான் என் சரீரத்தைச் செருப்பாய் உழைத்துச் சாகிறேன். இந்த தடி முண்டை வீட்டில் இன்று இராமையினால் ராத்திரிக்காக வைத்திருந்த சோற்றைப் பூனை தின்றுவிட்டது. இன்று ராத்திரி பிண்டத்திற்கு என்ன செய்வது? என் கஷ்டம் எனக்குத் தெரியும். என் வயிறு பற்றி எரிகின்றது. இதன் அப்பன் சண்டாளன் இதைத் தொலைத்துக்கொண்டு போயிருந்தால் நான் எத்தனையோ நிம்மதியா யிருப்பேன். இது என் காலைச் சுற்றிக்கொண்டு குடலை அறுக்கின்றது.'' என்று ஏதேதோ சரமாரியாக வைதுத் தன் குறையை முறையிட்டாள்.

இது கேட்ட உத்தமர் அந்தப் பெண் அறிவிலிகளின் வயிற்றில் பிறந்து, அறிவிலிகளுடனேயே பழகி இருப்பினும் அதன் பூர்வ ஜென்ம வாஸனையின் பலனாக அதற்குக் கல்வியின்பேரில் அளவற்ற ஆசை இருப்பது கண்டு வியந்தார். அடியின் உபத்திரவத்தின் கொடுமையினால் குழந்தையின் தேகம் முற்றும் தழும்பு தழும்பாக வீங்கியதுடன், அது களைத்துச் சோர்ந்து ரங்கமணியின் தோள் மீது சாய்ந்துவிட்டது.

உத்தமர் கிழவியை நோக்கி "பாட்டீ! நீயோ கல்வியின் வாஸனையைக் கண்டறியாதவள். இந்த குழந்தை சேற்றில் செந்தாமரை முளைத்தது போல உனக்குக் கிடைத்தது. எத்தனையோ அருமையான கல்வியைக் கற்கத் தானாக முயல்வதை நீ சற்று படித்தவளாக விருப்பின் தடுப்பாயா? பிச்சை எடுத்தேனும் அதை நன்றாகப் படிக்க வைத்தால் எந்த விதத்திலாவது உன்னைப் பிற்காலத்தில்—நீ உயிருடன் இருந்தால்—தாங்கும்; அதன் வயிற்றை வளர்த்துக்

---

தர்மத்திற்கென்று ஒரு காரியத்தைச் செய்யப் புகுந்தால் அதை ஆதரிப்பதற்கு ஸ்திரீகளும் புருஷர்களும் ஆயிரம் ஆக்ஷேபனை சமாதானங்கள் கூறி ஒரு ரூபாய் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆனால் "இந்த ஸினிமாக் காக்ஷி பத்து வாரங்களாக நடைபெறுகின்றது; 'இந்த டிராமா

கொள்ளும் என்று நினைப்பாய். அதை அதனுடைய பிதா அழைத்துச் சென்றால் நீ யனுப்பி விடுவாயா!'' என்றார்.

கிழவி:—அப்பாடா! ஒரு பளுவு நீங்கிற்று என்று எண்ணித் தாராளமாய் அனுப்பி விட்டு எனக்குக் கிடைத்தால் தின்பேன்; இல்லையேல் பட்டினி கிடப்பேன். என் காலத்தைத் துலைப்பேன். இதை வைத்திருப்பதால்தான் இதன் வயிற்றிற்குத் தேடவேண்டி இருக்கிறது. தன் பேத்தியை இப்படி சொல்கிறாளே என்று நீங்கள் நினைக்கலாம். என் மகளை ஆயிரம் பாடு பட்டு எடுத்து வளர்த்து விவாகம் செய்து கொடுத்து எல்லாம் செய்தேன். அவளே போய் விட்டாள். இனி எனக்கு மனம் வெறுத்து உடைந்து விட்டது. இந்த சனியன் எல்லாம் எதற்கு என்றுதான் தோன்றுகின்றது. அந்தச் சண்டாளன் இருப்பிடமே தெரியவில்லை. எங்கேயோ ஓடி விட்டானும். இனி அந்த வார்த்தை எதற்கு?—என்றாள்.

சர்வோத்தமர்:—பாட்டீ! உன் வழியிலேயே பேசுகிறேன். இப்போது இந்தக் குழந்தையின் பிதா வந்து அழைத்துப் போவதாயின் அனுப்புவதாகச் சொன்னாயே! ஆனால் அவனிருப்பிடமே தெரியவில்லை. ஆதலால் இதை நானே எடுத்துக் கொண்டு போகிறேன் கொடுக்கிறாயா! இதன் புத்திசாலித் தன்மையை நன்றாக விருத்தி செய்கிறேன். இதனால் உன்னையும் நான் என் வீட்டிலேயே வைத்துக் காப்பாற்றுகிறேன். வருகிறாயா? நான் யார் உனக்குத் தெரியுமா?

கிழவி:—அய்யா! என்னைப் பைத்தியக்கார முண்டை என்று கேலி செய்கிறீர்களா! என் பவிஷுக்கு ஆதரிப்பாரும் புவியில் உண்டா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியாது—என்றாள். அருகில் இருக்கும் ஜனங்களில் சர்வோத்தமரைத் தெரிந்தவர்கள் அவருடைய தயாளத் தன்மையைப் பற்றி ஏற்கெனவே கேள்வியுற்றிருக்

---

பல விடங்களில் புகழ் பெற்றுள்ளது'' என்கிற பகட்டான விளம்பரங்களைக் கண்ட வுடன் தர்மத்திற்குத் கொடுக்கத் தயங்கியவர்கள் அவற்றிற்கு ஐந்தும், பத்துமாகக் கொட்டி விடுகிறார்கள். முதலி விருந்த சிக்கனம் இப்போது எங்கு மறைந்ததோ?

கிறார்கள். ஆதலால் இந்த விதமாக இங்கு நடக்கும் சம்பவங்கள் அவர்களுடைய வியப்பைத் தூண்டின. அவர்கள் கிழவியை நோக்கி, "ஏ பாட்டி! இந்த ப்ரபுதான் கலியுகத்தில் கர்ணன் என்று ஜனங்கள் கூறும் சர்வோத்தமர் என்வார்; இவரைப் பற்றிக் கேள்விப்பட்ட தில்லையா?'' என்றார்கள்.

இது கேட்ட கிழவி திடுக்கிட்டாள். ஏனெனில் அவள் வேலை செய்யும் வீட்டில் சர்வோத்தமரைப் பற்றியும், ரங்கமணியம்மாளைப் பற்றியும் அடிக்கடி பேசிக் கொள்வதைக் கேள்வி யுற்றிருக்கிறாள் ஆதலால் ஆச்சரியம் அடங்காமல் "ஆகா! தாங்கள்தானா!'' என்று கூறி வியப்பே வடிவாய் அவரது காலில் விழுந்து வணங்கி "சாமீ! தர்ம ப்ரபுவே! என்னை மன்னிக்க வேண்டும். என் மூட மதிக்கு க்ஷமிக்க வேண்டும். ஏதோ வயிற்றுக் கொடுமையினால் நான் ஏதோ பிதற்றி விட்டேன். என் எஜமானர் வீட்டில் தங்களைப்பற்றி அடிக் கடி புகழக் கேட்டிருக்கிறேனே யன்றி தங்களை நேரில் தரிசனம் செய்ததில்லை.'' என்று கூறி வணங்கி நின்றாள்.

இது கேட்ட அவர் "பாட்டீ! உன் எஜமானன் வீடு எது? எதற்காக அவர்கள் என்னைப் புகழ்கின்றார்கள்?'' என்று கேட்டார்.

கிழவி:—ஐயா! ஆதி நாராயண முதலியார் வீடுதான் என் எஜமானர் வீடு. அங்குதான் வேலை செய்து வயிறு வளர்க்கிறேன். அவருடைய நெருக்கடியான சமயத்தில் கிஸ்தி கட்டுவதற்காக தாங்கள் சற்றும் யோசிக்காமல் 500 ரூபாய் கொடுத்து அவருடைய கஷ்டத்தைத் தீர்த்து உதவி செய்தீர்களாம். அந்த உதவியை அவர்கள் தினம் பத்து தரம் பாராயணம் செய்வதுபோல சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். உங்களுடைய தயவில்தான் அவர்கள் சாப்பிடுவதாயும், ஜீவிப்பதாயும் சொல்லி மகிழ்கிறார்கள். தர்ம ப்ரபுவே! தங்கள் தரிசனம் கிடைத்தது எனக்கு பூர்வ ஜென்ம புண்ணியமே'' என்றாள்.

---

குழந்தைகள் செய்யும் வேடிக்கைக் கும்மியோ, நாட்டியமோ முதலியவற்றில் பொது மக்களுடைய ஆரவார சந்தோஷத்தைப் பெற்று விட்டால் தாய்மார்களுக்குச் சொர்க்கப் பதவி யடைந்து விட்டதான சந்தோஷம் ஏற்பட்டு விடுகின்றது. மேற் குறித்தவற்றில் அபஜெய மடைந்து

பிறகு சர்வோத்தமர் "பாட்டி! அவர்களா! சரி எனது சினே கிதரே ஆதி நாராயண முதலியார்; அது கிடக்கட்டும். மனிதர் ஒரு வருக்கு ஒருவர் உதவி செய்வது என்ன அதிசயமா! எனக்கது பெரியதல்ல. நான் கேட்டதற்கு என்ன சொல்கிறுய்? குழந்தை யோடு என் வீட்டிற்கு வந்து விடு. உன்னையும் குழந்தையையும் நான் காப்பாற்றுகிறேன். இது உறுதி" என்ருர்.

இது கேட்ட கிழவி மிக்க மனங் களித்து அதற்கு இசைந் தாள். அன்று ஸ்கூலைப் பார்த்த உடனே கிழவியையும் குழந்தை யையும் வீட்டிற்கு அழைத்துச் சென்ருர்கள். அந்த குழந்தையை அன்று முதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வெகு வாஞ்சையோடு வளர்க்கலானுர். அந்த குழந்தையைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார். அதற்கு நல்ல ஆடைகள் அணிவித்து, சாதா ரணமான ஆபரணங்கள் செய்து போட்டார்கள். தங்களுக்குக் குழந்தை இல்லாக் கவலையைத் தீர்ப்பதற்காகவே கடவுள் இந்தப் பெண்மணியை அருளியதாக தம்பதிகள் இருவரும் எண்ணினுர்கள். பெற்ற குழந்தையை விட அதிக பாசம் அவர்களை யறியாது தானு கவே சுரந்துவிட்டது. அக்குழந்தைக்கு இவர்கள் இஷ்டப்படி இன்ப மணி என்று நாமமிட்டு அப்படியே அழைக்கலானுர்கள். இந்தக் குழந்தைக்கென்று ஓர் வண்டி வாங்கி அதில் அவளை பள்ளிக்கூடத் திற் கனுப்பி, அழைத்து வந்தார்கள்.

தெருவில் பொறுக்கிக்கொண்டு, கட்டக் கந்தையற்றுக் கிடந்த இந்த பெண்ணுக்கு வந்த அதிர்ஷ்டத்தைக் கண்டு அந்த ஊரே பிர மித்தது. பள்ளிக்கூடத்துப் பெண்களெல்லாம் வியப்படைந்து இந்தப் பெண்ணையே ஒரு மாதிரி பார்ப்பதும் பேசுவது மானுர்கள்: சர்வோத்தமரின் வீட்டுப் பெண்ணுகையினுல் அதை வாத்தியார் முதல் எல்லோரும் வெகு அன்பாக நடத்த வாரம்பித்தார்கள்.

---

விட்டாலோ அவர்கள் கொடிய சர்ப்பம்போல சீற்றங் கொண்டு "என் பெண்ணுக்கென்று இந்த வேஷம் கொடுத்தார்கள். வஞ்சனை, பக்ஷபாதம், பணக்காரர், ஏழை என்ற வகைமாரி பொழிந்து தாண்டவஞ் செய்யத் தொடங்கி விடுகின்ருர்கள். இது ஒரு பெரிய வேடிக்கை யல்லவா?

முன்பு "சேங்கி! சேங்கி!" என்று வழங்கப்பட்ட கிழவியின் பெண் என்கிற பட்டம் மாறிப்போய், உத்தமரின் ஸ்வீகாரப் புதல்வி என்கிற பெயர் வந்துவிட்டது.

பூர்வ ஜென்மத்தின் வாஸனையினால் அந்தப் பெண்ணின் இயற்கை புத்தி அபாரமா யிருந்ததால் அவள் நன்றாகப் படிக்கத் தொடங்கினாள். வயதில் சிறியவளாயினும் தன்னுடைய ஏழ்மை நிலைமைக்கிரங்கி ஆதரிக்கும் தம்பதிகளைத் தன் குல தெய்வங்களாக அவள் எண்ணினாள். அவர்களையே தனது உயிர் என்று தீர்மானித்தாள். சர்வோத்தமர், ரங்கமணி இருவருக்கும் எப்படி நடந்தால் ப்ரீதியோ அந்த வழியை நன்றாகத் தெரிந்துகொண்டு முகங் கோணாமலும், தன்மீது இன்னும் அபாரமான அன்பு சுரக்கும்படியும் நடந்து கொள்வாள். இதனால் அவர்களுக்கும் இவளிடத்தில் அபாரமான அன்பு உதித்து விட்டது. அதனால் அவர்கள் மனமும் மிக்க களிப்புற்றோங்கியது. அனேக நாளாய் ஒரு குழந்தை இல்லை என்று கவலைப் பட்டதெல்லாம் மாறிப் போகும்படியான ஆநந்தம் உண்டாகி விட்டது. இப் பெண்ணின் ஏழ்மை நிலைமை மறைந்த உடனேயே இதற்குப் பிரத்தியேகமான அழகு ஒன்று வந்து விட்டது. அந்த அழகுடன்கூட ஆடையாபரணங்களும் சேர்ந்ததால் பார்ப்பவர்களுக்குப் பெரிய மனிதர்களின் வீட்டுப் பெண்போலவே தோன்றினாள்.

மாலை நேரத்தில் தம்பதிகள் தங்களுடன் அப் பெண்ணை மோட்டாரில் உட்கார வைத்துக்கொண்டு போவார்கள். அப்போது அப் பெண்ணுடன் ஆதியில் விளையாடிய ஏழைக் குழந்தைகள் பார்த்து வியப்புற்று, "ஆகா! இந்தப் பெண்ணுக்கு வந்த அதிர்ஷ்டந்தான் என்ன? நம்மோடு கந்தைப் பாவாடைக்கும் வழியற்றுக் கிடந்த இவள் இப்போது பட்டுப் பாவாடையும் சரிகைப் பாவா

---

ஒரு காரியத்தைத் தாமாகவே செய்ய வேண்டுமென்று ஊக்கத்துடன் முன் வருபவர்கள் எப்படியும் அக் காரியத்தை ஜெயித்து பெரும் புகழையும் அடைகின்றார்கள். அதில் சம்பந்தப்பட்ட வேறொருவர் அவர்களுக்குப் புகழ் வந்து விட்டதே என்கிற பொறாமையால் அதே விதமாக

டையுமாக மின்னுகிறுளே!'' என்று நினைத்தவாறு கொட்டாவி விட்டுக் கொண்டு நிற்பதைப் பார்த்தால் இன்பமணிக்குப் பழைய நினைவுகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றும். தன்னைப்போல அப் பெண்களுக்கும் நல்ல காலம் வருவது கூடாதா என்று மனத்திற்குள் நினைத்து வருந்துவாளே யன்றித் தனக்கு இத்தகைய பெரிய பதவி கிடைத்து விட்டதே யென்று சற்றும் கர்விக்கவே மாட்டாள். சிறு பிராயத்திலேயே இத்தகைய மேன்மையான குணம் இயற்கையாக அமைந்துள்ளதைப் பற்றி சர்வோத்தமர் உள்ளம் பூரிப்பார்.

இன்பமணிக்கு சங்கீதமும் சொல்லிக்கொடுக்க ஆரம்பம் செய்தார்கள். சர்வோத்தமருக்கு ஏற்கெனவே சங்கீதத்தில் அதிக ப்ரீதியாதலால் அவருடைய இஷ்டம் பூர்த்தியாவதற்கு அந்தப் பெண்ணுக்குச் சொல்லிக்கொடுக்க வாரம்பித்தார். தினந்தோறும் விடியற்காலம் இன்பமணியைத் தானே மடியில் உட்காரவைத்துக் கொண்டு முகுந்தமாலை, கர்ணம்ருதம் முதலிய சுலோகங்களும் தாயுமானவர் ராமலிங்கசுவாமிகள் பாடல்களும் சொல்லிக்கொடுப்பார். அதன் பிறகு சங்கீதம் சாதகம் செய்வாள். அதன் பிறகு பள்ளிக்கூடப் பாடம் படிப்பாள். பின்னர் தலை பின்னிக்கொண்டு குளித்துவிட்டு பூஜை செய்கையில் தானும் கூட நிற்பாள். நமஸ்கரிப்பாள். பிறகு பிதாவுடனேயே போஜனம் செய்துவிட்டுப் பள்ளிக்கூடம் செல்வாள். பிறகு சாயங்காலம் திரும்பி வந்ததும் சங்கீத வாத்தியாரிடம் கற்றுக்கொண்டு தாய் தந்தையாரோடு வெளியில் உலாவச் செல்வாள். திரும்பி வந்ததும் சிறிது நேரம் பாடுவாள். அதன் பிறகு போஜனம் செய்து சற்று படித்துவிட்டுப் பின் நித்திரை செய்வாள்.

இவ்விதமே தினம் ஒரு சிறிதும் தப்பாது கிரமமாகச் செய்து வருவதானது எல்லோரும் வியக்கத் தக்கதாக இருந்தது. இவ்வாறு

---

வேறொரு காரியத்தைச் செய்துத் தாமே பிரக்யாதி அடைய வேண்டுமென்று ஆரம்பிக்கிறார்கள். பொறுமை எத்தகைய சிலாக்கியமானதோ அத்தகைய சிலாக்கியமான முடிவே அவர்களுக்கு ஏற்பட்டு பிரக்யாதிக்குப் பதில் அபக்யாதியே கிடைக்கின்றது.

சில வருடங்கள் சென்றன. இன்பமணியின் பாட்டி பரலோக மடைந்தாள். அவளுக்கு வயது 14 ஆயிற்று. நல்ல பக்குவத் தருணீமணியாய் விளங்கினாள். அவள் மேனியில் கமல ஆபரணங்கள் நிறைந்தன. ரங்கமணியம்மாளின் சொந்தப் பெண் என்றே அனேக ரும் தீர்மானித்து விட்டார்கள்.

பணக்காரர் வீட்டுப் பெண்ணும், கல்வியும், ரூபமும், சங்கீத மும் ஒருங்கு கூடி யமைந்த வனிதையாயு மிருப்பதால் அவளை மணம் செய்துகொள்ள நான், நீ என்று அநேகர் போட்டியிட வாரம்பித்தார்கள். சர்வோத்தமருக்கு இப்போது விவாகம் செய்யப் பிரியமில்லை. அதேபோல அவளுக்கும் இஷ்டமில்லை. தன் தாய் தந்தையரின் வார்த்தைக்கு பிரதி வார்த்தையின்றி நடந்து அவர்க ளின் பூர்ண அன்பையும் சம்பாதித்துக் கொண்டதன் பயனாக அவ ளிடம் இரும்புப் பெட்டி சாவி முதல் சகல சுதந்திரங்களும் உண் டாகிவிட்டன. யாரேனும் பிச்சைக்கு வந்தால் கூட அவள்தான் போடவேண்டும். ஏதேனும் ஒன்று செய்வதென்றால் அவளைக் கேட்டு அவளுடைய யோசனையின்படித்தான் செய்வார்கள். தனக்கு இத்தகைய எதிர் பாராத அதிர்ஷ்டம் வந்துவிட்டதே என்கிற பெருமையோ, கர்வமோ, இறுமாப்போ சற்றும் கொள் ளாது அவள் அவர்களுக்கு அடிமை போலவே நடந்துவந்தாள்.

தனது கண் கண்ட தெய்வங்கள் உத்தமரும் ரங்கமணி யம்மா ளுமே யென்று தீர்மானித்து விட்டாள். பிறவிக் குருடனுக்கு இரு கண்களும் தெரிந்து விட்டதுபோல தனக்கு திடீரென்று வந்த அபாரமான அதிர்ஷ்டத்தை எண்ணித் தானே வியப்புற்றாள். தனது ஆதி கால வாழ்க்கையையும் அக் காலத்தில் தான் கந்தைத் துணி யும், காபிரி வேஷமும், தலைவிரி கோலமுமாய் அங்ஙனமே உள்ள

---

சில குள்ள நரிகள் கொள்ளை கொள்ளையாகப் பணத்தை வாங்கிக் கொண்டு சங்கீதக் கச்சேரி செய்து விட்டு "தர்மத்திற்காக ஒரு பைசாவும் வாங்காமல் பாடினேன்" என்று விளம்பரம் செய்து கொள்கிறார்கள். பணம் கொடுத்தவர்கள் உண்மையை வெளியிட்டுவிடின் தங்கள் கதி என்னவாகு மென்பதை அவர்கள் அறிவதில்லை.

பெண்களோடு கோலி, பாண்டி, கண்ணு மூச்சி, தட்டா மாலை முத லிய ஆட்டங்களை யாடித் திரிந்ததும் இன்பமணியின் கண் முன்பு கண்ணாடி போலத் தோன்றும். அந்த பிம்பத்தையும் இப்போது தானிருக்கும் பிம்பத்தையும் பார்த்து மிகவும் ஆச்சரியப் படுவாள்.

தான் உயர்ந்த பதவியை அடைந்து விட்டதை எண்ணி ஒரு நிமிடமும் கர்வம் கொள்ளாமல் தன் வாழ்க்கையில் இதோர் நாட கம் என்றே எண்ணுவாள். தன் எஜமானுக்களின் பாத தூசியாகவே தன்னை எண்ணி அவர்களின் மனப் போக்கு எது என்பதை வெகு ஊக்கமாகக் கிரகித்துக் கொண்டு அதற்கு ஒரு அணுவும் பிசகாமல் அதற்கு இசைந்தார்ப் போல நடந்து கொள்வதையே தன் கட மையாக எண்ணினாள்.

உத்தமருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் ரங்கமணி யம்மாளுடன் கூடவிருந்து தானே செய்து முடிப்பாள். தினம் காலையில் எழுந்த உடன் புஷ்பம் பறித்து, மாலை கட்டி வைப்பது இன்பமணியின் முதல் கடமையானது. இவ்விதமே பல வேலைக ளைக் கவனிப்பதோடு ஏழைகளிடத்தில் மிக்க தயாளமும் தனது பூர்வீக அனுபவத்தை மறக்காத சிந்தையும் கொண்டு நடந்து வந்தாள்.

ஏற்கெனவே பணத்தின் மூலம் உத்தமரை பரம த்வேஷியாகப் பாவித்து வரும் எதிரிகளுக்கு, கேவலம் தெருவில் ஓடிக்கொண் டிருந்த ஏழைப் பெண்ணைக் கொண்டு வந்து தமக்குச் சரி சமான மான பதவியில் அவர் வைத்திருக்குங் காக்ஷியால் பொறாமை என்னும் தீ மூண்டு கப கப என்று பற்றி எரிய வாரம் பித்தது. இவர்களுடன் இன்பமணி செல்வதையும் இன்பமணி இவ் வீட்டில் சுதந்தரமாக வாழ்வதையும் காணக் காண—கேட்கக் கேட்க, பின்னும் அகோரமாக மண்ணெண்ணெய் ஊற்றியதுபோலப் பற்றிக் கொண்டது.

---

உலகானுபவம் அதிகமாக அடைய வேண்டுமெனில் ஒரு தர்ம காரி யத்திற்காக டிக்கட் விற்கச் சென்றால் எளிதில் அடைந்து விடலாம்... அசந்தர்ப்பத்திற்கு நான்...விருந்தாளிகள் வரப் போகிறார்கள்...சினே

இன்பமணி தனிமையில் காலேஜிக்குச் செல்லும்போதும், தன் உபாத்தியாயினி வீட்டிற்குச் செல்லும்போதும் இச் சோதாக்கள் மோட்டார் மீது கல்லே எறிவதும், அவளேக் கண்டு "அல்ப பிச்சைக் காரக் கழுதைக்கு வந்த போகத்தைப் பார்த்தாயா! எச்சில் இலேயை நக்கும் நாய்போல அலேந்ததற்கு வந்த பவிஷைக் கண்டாயா! என்ன அட்டகாஸம்! என்ன ஆடம்பரம்!" என்று இவள் காது கேட்கும்படி வேண்டுமென்றே சமயம் பார்த்துக் கூறுவார்கள். "ஏய்! பிச்சைக்காரப் பேயே! வெட்கமில்லாது மோட்டார் காரிலே போருயே! சீச்சீ குரங்கு!" என்று கத்துவார்கள்.

இதை எல்லாம் கேட்கக் கேட்க இன்பமணியின் மனம் மிகவும் தத்தளித்து வருந்தும்: அவள் வீட்டிலிருந்து புறப்படுவதற்கே பயந்து நடுங்கினுள். இதைத் தன் தாய்தந்தையரிடம் கூறவும் பயப்பட்டாள். "இத்தகைய காலாடிகளால் எந்த சமயம் என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ! ஈசா!" என்ற கவலே பிரம்மாண்டமாகப் பெருகி விட்டதால், அதே ஏக்கங்கொண்டு தவித்துவிட்டாள்.

---

## 6-வது அதிகாரம்

## அலங்கோல மரணம்—அலகைகளின் நடனம்

எட்டு குழந்தைகளேயும் பசியின் தவிப்புடன் அழைத்துக்கொண்டு போகும் கதிர்வேலின் நிலேமையைக் கூறவேண்டுமா! கையில் பிடித்துள்ள குழந்தைகள் "தாதா! எங்கே போறே? பசிக்குதே சாதம் எங்கே? ஏன் அவாத்திலே போடலே? பசி பிராணன் போறதே!" என்று கத்து

---

தெர் வீட்டில் கலியாணம்...உறவினர் இறந்து விட்டார்கள்...பணம் கொடுத்து வேடிக்கை பார்க்கும் வழக்கமில்லே...புருஷர்களோடு கூடத் தான் போக முடியும்; ஸ்திரீகளுக்கு மாத்திரம் இருப்பதால் வர முடி

கின்றன. கிழவருக்கோ ஜொரத்தின் வேகத்தினுல் நடக்க முடியவில்லை. மனுேவேதனையோ கூற முடியவில்லை. என்ன செய்வார் பாவம்.

இந்த குழந்தைகளை ஜெயமணி எத்தனை சமாதானம் செய்தும் அவைகள் கேட்கவில்லை. ஒன்றிரண்டு களைத்துப் போய்ச் சாய்ந்தும் விட்டன. கதிர்வேல் அந்த நிலைமையிலும் இந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு அங்கு சமீபத்திலுள்ள ஓர் ஒட்டலுக்குள் நுழைந்தார். அந்த ஒட்டல்காரர் அதிக பழக்கமில்லை எனினும் அவ்விடத்தில் அனேக நாட்கள் வந்திருப்பதால் சற்று தெரியும். ஆதலால் உள்ளே சென்று "ஐயா! தாங்கள் ஒரு உபகாரம் செய்யவேண்டும். இந்த குழந்தைகளுக்கு ஒரு கவளம் ரசம் சாதம் கொடுத்தால் மிகப் புண்ணியமுண்டு. நாளைய தினம் பணங் கொடுக்கிறேன்." என்ருர்.

அப்போது நேரம் ஆகிவிட்டதால் "எல்லாம் ஆய்விட்டது; மிச்சம் மிகுதியை வேலைக்காரர்களுக்குப் போட்டாகி விட்டது. 10 மணி யடிக்கப் போகிறது. இப்போது ஏதைய்யா?" என்று கூறி விட்டார். கதிர்வேல் என்ன செய்வார் பாவம்! கையில் காசிருந்தால் ஏதேனும் வாங்கியாவது கொடுக்கலாம். அதுவுமில்லை. "காப்பி கூட கிடைக்காதா!" என்ருர். 10 மணிக்கு எந்த ஒட்டலில் எதுதான் கிடைக்கும் ஐயா! வேறு எங்கேனும் விசாரித்துப் பாருங்கள்" என்று ஒட்டல்காரர் கூறிவிட்டார்.

பிறகு அந்தக் குழந்தைகளுடன் வேறு ஒட்டலுக்குச் சென்று விசாரித்தார். கதிர்வேலுவை நேராக அந்த ஒட்டல்காரருக்குத் தெரியாதெனினும் கதிர்வேலு வேலை பார்த்து வந்த கடையின் சொந்தக்காரச் செட்டியார் நன்ருகத் தெரியுமாதலால் அவரை உட்காரச் செய்தார்.

---

யாது. ஏற்கெனவே, ஆபீஸிலும், பள்ளிக்கூடத்திலும் கொடுத்தாய் விட்டது...புருஷர்கள் வீட்டிலில்லை—என்றது போன்ற இன்னும் அநேக வித சாக்குகளை நம் பெண்மணிகள் தாராளமாகக் கூறுகின்ருர்கள்.

இரவு நெடுநேரமாகி விட்டதால் எல்லாம் ஆய்விட்டது. எனினும் சாதமும் மோரும் இருந்தன. "அதைக் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் போதும்'' என்று கதிர்வேல் கூறியதால் அதைக் கொணர்ந்து கொடுத்தார். குழந்தைகளுக்கிருந்த பசியில் லபக் லபக்கென்று வாரிப் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டுத் தண்ணீரைக் குடித்துப் பசியாறினர்கள்.

கிழவருக்கு அதிகமான தலைவலியும், ஜுரமும் தாங்கமாட்டாத தவிப்பை யுண்டாக்கியதால் குழந்தைகள் சாப்பிடும்வரையில் அங்குள்ள பெஞ்சியின் பேரில் படுத்துக்கொண்டார். அந்த ஓட்டலிலேயே, அறைகளை வாடகைக்கு வைத்துக்கொண்டு படிப்பதால் சில மாணவர்கள் தங்கள் தங்கள் அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதல்வன் :—என்ன அனியாயம் பாருங்கள். மோட்டார் பஸ் எமன் வருவதற்குமுன் இத்தனை அனியாயச் சாவுகள் நடக்கவில்லை. இப் பாழாப் போன மோட்டார் பஸ்களினுல் ஆபத்தில்லாத நாள் கிடையாது.

182963

இரண்டாவதுவன் :—இதற்குக் கேள்விமுறை ஏதைய்யா! பஸ் ஓட்டிகளின் அஜாக்ரதையினுல் தான் இத்தகைய விபத்துக்கள் நேரிடுகின்றன. குடிகாரர்கள் செய்யும் வேலையா இது. சில பஸ் ஓட்டிகள் பீடியைக் குடித்துக்கொண்டே ஓட்டுகிறார்கள். அந்த நெருப்புத்துண்டு எங்கேனும் பெட்ரோலில் பட்டுவிட்டால் என்ன கதியாவது?

மூன்றுவதுவன் :—ஓகோ! இது தெரியாதா உனக்கு? சில நாளைக்கு முன்னர் பீடி குடிக்கும் பேரானந்த மூர்த்தி ஒருவரால் பஸ்ஸே பற்றிக்கொண்டு எரிந்ததை நாம் பார்க்கவில்லையா! பிரயாணிகள்தான் பீடி பிடித்து இந்த விபத்தை உண்டாக்கியதாக பஸ்காரர்

---

நம்மைப் போன்ற மக்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்க பாயும், நிற்க நிழலு மின்றித் தத்தளிக்கும் நிலைமையைச் சிந்தித்துப் பார்த்தால் ஒரு ரூபாய் கொடுப்பது ஒரு பெரிய காரியமா (அதிலும் வேடிக்கை பார்த்து விட்டுக் கொடுப்பது.)

கூறுகிறார். ட்ரைவர்தான் பீடி பிடித்து இவ்வித மாகிவிட்டது என்று பிரயாணிகள் கூறுகின்றார்கள். இதில் எது உண்மை? பஸ் எரிந்த தென்னவோ உண்மை. ஐயோ! மூன்று பேர் இறந்ததில் ஒரு பிணத்திற்கு மட்டும் தகவலே கிடைக்க வில்லையாமே, அது யார் வீட்டுப் பெண்ணோ, என்னவோ!

முதல்வன் :—என்ன இழவோ! அவளை வெளியி லனுப்பிவிட்டு வருகையை எதிர் பார்த்துக்கொண்டு யார் காத்திருக்கிறார்களோ! சின்னபெண்தானப்பா! வயது இருபதே ஆகவில்லையாம். கண்ணிற்கு அழகாயும் கம்பீரமாயுமிருக்கிறாளாம். சவத்தையும் படம் பிடித்துப் போட்டிருக்கிறார்களே. யார் வயிறு எரிந்துவிட்டதோ?

என்று மேல்படியார் பேசிக் கொண்டிருந்தது கதிர்வேலின் காதில் விழுந்த உடனே அவர் தீயை மிதித்தவன் போல துள்ளினர். "ஹா! எங்கே என்னவிபத்து! யாருக்கு?'' என்று கேட்டுக்கொண்டே அலறியவாறு அவ்வறைக்குள் நுழைந்தார். இவருடைய பரிதாபகர மான நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தியவர்களாய் அன்று பத்திரிகையில் வந்துள்ள விஷயத்தைப் படித்துக் காட்டியதோடு அதில் பிரசுரித்துள்ள படத்தையும் காட்டினார்கள்.

இதைக் கேட்டதும் கதிர்வேலின் உயிர் பாதி நீங்கிவிட்ட தென்றே கூறவேண்டும். படத்தைப் பார்த்ததும் "ஹா! ஸ்ரீமணி! ஸ்ரீமணீ! ஐயையோ! இப் பெண்ணைப் பெற்ற பாவிநான்தான்: ஐயோ! ஐயோ! என் தலையில் கல்லைப் போட்டுவிட்டாயே! என்ன செய்வேன்?'' என்று கதறி அப்படியே வேரற்ற மரம் போல விழுந்து பிரக்ஞை யற்றார்.

இதைக் கண்ட அவர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கதி கலங்கிவிட்டது. இவ்விஷயம் ஒட்டல் பூராவும் பரவிப்போய் கும்பல் கூடிவிட்டது. குழந்தைகளெல்லாம் பெரியதாக அழ வாரம்பித்து

---

பெரிய மனிதர்களின் வீட்டுப் பெண்கள் நாகரிகமும், நாசூக்கும் மிகுந்தவர்கள்; வீணை அரட்டை யடிக்க மாட்டார்கள் என்று சிலர் மலைக்கின்றார்கள். ஆனல் நாகரிக மறியாத சாதாரண மனிதரை விட

விட்டன. அந்த ஓட்டலே அல்ல கல்லோலப் படுகிறது. வீதியிலும் கும்பு கூடிவிட்டது.

ஜலந் தெளித்து விசிறிப் பார்த்தார்கள். கதிர்வேலுவுக்கு ப்ரக்ஞையையே உண்டாகவில்லை. "ஐயோ! யாரோ வெளியில் போகிற மனிதன் இங்கு செத்துவிட்டால் என்ன செய்வது?" என்ற பயம் ஓட்டல்காரனுக்குப் பிடித்துக் கொண்டது. இவர்களை எங்கே கொண்டு விடுவது என்று ஒன்றுமே தெரியவில்லை. அங்குள்ளோரில் சிலர் "இவரை உடனே ஆஸ்பத்திரியில் கொண்டு விடவேண்டும்; இல்லாவிட்டால் இறந்து விடுவார்" என்று கூறினர்கள்.

குழந்தைகளோ பின்னும் பயமும் கிலியும் பிடித்துப்போய் பெரிதாக அழ வாரம்பித்து விட்டன. அங்கு பத்திரிகை படித்த மாணவர்கள் ஓர் வண்டி கொண்டு வந்து கதிர்வேலுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனர்கள். இந்த கோரமான சம்பவத்தில் குழந்தைகளின் கண்ராவியைக் கேட்க வேண்டுமா? "ஐயோ! அக்கா! அப்பா! அப்பா! அப்பாவை எங்கே கொண்டு போய் விட்டீர்கள்? எங்க அக்கா எங்கே! அக்கா! அக்கா!" என்று புரண்டு உருண்டு அழுவாரம்பித்து விட்டன.

அந்த மாணவர்களில் ஒருவர் இவர்களைச் சமாதானம் செய்து தேறுதல் கூறித் தன்னறையிலேயே வைத்துக் கொண்டார். என்ன கூறினும் அடங்கக் கூடிய குழந்தைகளா அவர்கள்! அவர்களுக்குள் பெரியவளான ஜெயமணிக்குத் தன் தமக்கை இறந்து விட்டாள் என்ற விவரம் நன்ருகத் தெரிந்து விட்டது. தகப்பனருக்கும் ஏதோ ஆபத்து வந்து விட்டதென்று அறிந்து கொண்டாள். அவளால் சகிக்கவே கூடவில்லை. "ஐயா! எங்களை ஏன் இங்கு வைத்துக் கொள்ள வேண்டும். ஆஸ்பத்திரியில் நாங்களும் இருக்கிறோமே! எங்கப்பாவுடன் கூடவே நாங்கள் செல்கிறோம். எங்க அக்காளின்

---

மலைக்கக் கூடிய பெரிய மனிதர்களின் வீட்டுப் பெண்பிள்ளைகள் தாம் எட்டு ஊர் எல்லைச் சமாச்சாரங்களைத் திரட்டி அட்டகாசமாகச் சட்டம் பேசி வம்பளக்கின்றர்கள்.

சவத்தையாவது நாங்கள் பார்க்லாகாதா! எங்களை யங்கு கொண்டு விட்டு விடுங்கள்'' என்று அலறினாள்.

இதைக் கேட்ட அம் மாணவன் "அம்மா! நீ சிறு குழந்தை யாகையினால் விவரமே தெரியவில்லை. உன் அக்காவின் பிணத்தை நீ பார்த்தால் பயப்பட்டு உடனே இறந்து விடுவாய். உன் தகப்பனா ருடன் உங்களை ஆஸ்பத்திரியில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். நோயாளிகளுக்கு மட்டும் ஆஸ்பத்திரியில் இடம் உண்டே யன்றி சாதாரண மனிதர்களைச் சேர்க்க மாட்டார்களம்மா! உங்களுக்கு இங்கு வேறு உறவினர்கள் இருக்கிறார்களா! அங்கு கொண்டு விடட்டுமா?'' என்றான்.

அயோமயமான புலம்பலில் ஜெயமணிக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. தவித்தவாறு "ஐயா! எங்களுடைய சரித்திரம் ஓர் கதையைப் போன்றது. உலகத்தில் மகா பாவிகள் என்றால் எங் களைப் போன்று கிடைக்காது. நாங்கள் எங்கள் அக்காளையும் தகப்ப னாரையும் தவிர வேறு ஒருவரையும் அறிய மாட்டோம். அவர்களை இழக்கும் விதி வந்து விட்டதே! என்ன செய்வோம்?'' என்று புலம் பினாள்.

மாணவன் :—அம்மா அழாதே! இங்குள்ள குழந்தைகள் எல்லாவற்றையும் விடப் பெரியவள் நீதான். நீயே அழுதால் இனி இவர்களை யார் தேற்றுவார்கள்? அப்பாவுக்கு உடம்பு குணமாகிய பிறகு வந்துவிடுவார். நீங்கள் படுத்துக்கொண்டு தூங்குங்கள்.— என்று சாமாதான வார்த்தைகள் கூறி படுக்கச் செய்தான்.

இந்த கோரமான நிலைமையில் யாருக்குத் தூக்கம் பிடிக்கும்! யார் தூங்குவார்கள்? கேவலம் சிறிய குழந்தைகள் தூங்கிவிட்டன. ஜெயமணியின் புலம்பல் ஓய்ந்த பாடே இல்லை. அழுதுகொண்டே படுத்திருக்கிறாள். இதற்குள் ஆஸ்பத்திரிக்கு கதிர்வேலைக் கொண்டு சென்றவர்கள் திரும்பி வந்தார்கள்.

---

முன்பின் யோசனை யின்றி திடீரென்று சிலர் ஒரு வார்த்தையைச் சொல்லி விடுகின்றார்கள். பிறகு அதன் உண்மையை விளக்கிப் பேசும் போது ஆடு திருடிய கள்ளன்போல விழிக்கின்றார்கள்.

உடனே ஜெயமணி "ஐயா! அப்பாவுக்கு எப்படி இருக்கிறது? தெளிந்தாரா; கண்ணைத் திறந்து பார்த்தாரா? என்ன சொன்னார்? எங்களை வரச் சொன்னாரா!" என்று பரிதாபமாகக் கேட்டாள். இதைக் கேட்டு எல்லோருக்கும் அடங்காத விசனமுண்டாகிக் கண்ணீர் வழிந்துவிட்டது. "ஆகா! என்ன பரதேசித் தன்மை! சொந்த மக்கள் மனிதர்கள் இல்லாத வாழ்க்கையும் ஓர் வாழ்க்கையா? கேவலம் இத்தகைய தாயற்ற குழந்தைகளை யாரும் பார்த்தே இருக்க மாட்டார்கள். பரிதாபம்! பரிதாபம்!! என்ன விதமான பதிலை இக் குழந்தைகளுக்குக் கூறுவது?" என்று தியங்கினார்கள்.

ஜெயமணியோ விடுவதாக இல்லை. "அப்பாவுக்கு எப்படி இருக்கிறது? மாமா! பொய் சொல்லாமல் சொல்லுங்கள். எங்க அக்காவின் பிணத்தையாவது நாங்கள் பார்க்கிறோம்; எங்களை அழைத்துக்கொண்டு போகலாகாதா!" என்று கெஞ்சி கேட்டாள்.

மாண:—அம்மா! இப்போது அகால வேளையாகி விட்டதால் எங்கேயும் செல்ல முடியாது; பார்க்கவும் முடியாது. காலையில் உங்களை அழைத்துக்கொண்டு போய் இருவரையும் காட்டுகிறேன். இப்போது படுத்துக்கொள்ளம்மா! நீயோ புத்திசாலியாகக் காணப் படுகிறாய். நீயே இவ்விதம் அழுதால் உனக்கும் சிறியதாகிய குழந்தைகள் என்ன செய்வார்கள். அழாதே!—என்று தேற்றினான்.

அதற்கு மேலும் என்ன செய்வாள் பாவம்! மனம் படும் பாட்டைக் கூறத் திறமா! எல்லாக் குழந்தைகளையும் விட்டுக்கொண்டு படுத்துவிட்டாள். படுத்தபடியே புலம்பிப் புலம்பி தலையணை முற்றும் கண்ணீரால் நனைந்துவிட்டது. "அக்கா! அப்பா! அக்கா! அப்பா!!" என்று பிதற்ற வாரம்பித்துவிட்டாள்.

---

சுதேசியை ஆதரிக்க வேண்டும் என்று கதறும் இக்காலத்திலும் மருந்துக்கும் ஒன்று சுதேசியாக இல்லாமல் வீட்டிலுள்ள கம்பம், கதவுகள் முதற்கொண்டு ஜப்பான் விலகினால் அலங்கரிப்பதைக் காண மனம் கொதிக்கின்றது. இப்படியும் தேசபக்தி என்ற பசையே யில்லாது உலர்ந்து விடுமோ?

கோவிந்தன் வெகு விசனமும், ஆத்திரமுங் கொண்டு கதிர்வேலுவின் வீட்டில் தேடிவிட்டுக் காணமையினால் மிக்க மன அதிர்ச்சியுடன் "ஐயோ! காயும் ஜுரத்துடனும், பசியால் வாடும் குழந்தைகளுடனும் கதிர்வேலு எங்கே சென்றிருக்கக்கூடும்? பெண்களென நம்பி வீட்டில் இரு பேய்களையன்றோ கட்டி வைத்திருக்கிறேன். அவைகள் ஏதோ சொல்லித்தான் இருக்கவேண்டும், எங்கே போகிறேன் என்றதையாவது சொன்னார்களா?" கேட்போம் என்று எண்ணி நேரே வீட்டிற்கு வந்தார்.

அப்போது வீட்டிலிருக்கும் இரு தர்ம தேவதைகளும் பேசிக் கொண்டே இருந்தன. "ஏண்டி! அந்த அஷ்டமச் சனியன்களை இழுத்துக்கொண்டு அந்த கிழம் எங்கே போய் விட்டதோ தெரியவில்லையே; இத்தனை சோற்றையும் குழம்பையும் காய்ச்சி வைத்திருக்கிறதே! இதை யார் தலையில் கொட்டுவது? ரூபாயிக்கு இரண்டு படி அரிசி விற்கும் இக் காலத்தில் தண்ட பிண்டங் கொட்டி குடியைக் கவிழ்ப்பதுதான் வெகு அழகாயிற்றே. இப்படி மீத்தியும் கொட்டினால் என்ன செய்வது?" என்று தாண்டவமாடினாள் நாத்தி.

அண்ணி:—ஐயோ! எத்தனை தரம் சொன்னாலும் இந்த அழுகைதான். இந்த வீடு சவரணைப்படப் போவதில்லை; ஒன்றுமில்லை.—என்று ஏதேதோ பேசிக் கூத்தாடிக் கொண்டிருக்கையில் கோவிந்தன் வந்து இதைக் கேட்டு விட்டார். அவருடைய ஆத்திரம் தலைக்கேறி விட்டது. "அடி படுபாவிகளா! பெண் உருவங் கொண்ட அலகைகளா! ஐயோ! இப்போதல்லவோ எனக்குத் தெரிகிறது. நீங்கள் உண்மையைக் கூறப் போகிறீர்களா! இல்லையா! அவரை என்ன சொன்னீர்கள்? அவர் எங்கு சென்றார்?" என்று அதட்டிக் கேட்டார்.

இதைக் கேட்ட இரண்டு பேர்களும் பின்னும் கூச்சலிட்டு

---

சிலர் அயலாருடைய வண்டியில் செல்வதாயின் அனேக இடங்களுக்கு ஒரே நாளில் சென்று வர ஏற்பாடு செய்துகொள்கின்றார்கள். அவ்வண்டியில் கிடைக்கவில்லை யெனில், இன்று ஒன்று, இரண்டு இடம்

ஆடினார்கள். கோவிந்தன் ஆத்திரத்தில் மனைவியை நாலறை அறைந்துவிட்டுக் கூடத்திற்கு ஓடி வந்தார். மேஜைமேலிருந்த கடி தம் கண்ணில் பட்டது. உடனே அதை எடுத்துப் பார்த்தார். பின் வருமாறு இருந்தது.

"ஆப்த நண்பா! கோவிந்தா!

உலகம் இன்னதென்றறியாத மனிதர்களின் வாழ்க்கை யோர் வாழ்க்கை யல்ல. உலக மறிந்தோரே உயர்வாக வாழ முடியும். உலகம் பல விதம். நீயும் நானும் ஒன்ருகப் படித்த நாளில் விநோத ரஸ மஞ்சரியில் ஒரு கதை படித்தோமே. அதை நிதர்சனமாகக் கண்டதோடு உலகானுபவத்தையு மறிந்தேன்; வருத்தப்படாதே! அவரவர் விதிபோ லாகட்டும். என் ஸ்ரீமணி யின் தகவலை வீட்டில் வந்து சொல்லு.

கதிர்வேலு"

என்றதைப் படித்ததும் கோவிந்தனின் ஆத்திரம் பதின்மடங்கு பெருகியது. "நோயாளியாயும், வெளியில் சென்ற பெண் இன்னும் வரவில்லையே என்ற மனோ வேதனை யுடனும், பசி என்று வருந்தும் 8 குழந்தைகளுடனும் வீடேறி வந்த மனிதனை என்ன சொல்லி இவ்விதம் மனத்தை முறிய அடித்து விட்டார்களோ! தெரியவில் லையே! என்ன செய்வேன்? விநோத ரஸ மஞ்சரியில் கதை என்று எழுதி இருக்கிறதே! அது எதுவாக விருக்கும் என்று யோசனை செய்துப் பார்த்தார்.

உடனே நினைவிற்கு வந்து விட்டது. அதாவது பர்த்தா அதிதி களைச் சாப்பாட்டிற்கு ஆசையோடு அழைத்து வரவும், பத்தினி அவனறியாதவாறு அதிதிகளுக் கெதிரில் உரலை யலம்பிக் கோல மிட்டு உலக்கையை அலம்பி வைத்து, அவர்களை நோக்கி "ஐயா! நான் இப்போதே சொல்லி விடுகிறேன். என் புருஷன் மகா பாபி.

---

களுக்குச் சென்றால் போதும்; பிறகு பார்த்துக்கொள்வோம் என்ற நிலைமைக்கு அடுத்த க்ஷணமே வந்து விடுகின்றார்கள். பிறர் சொத்தாயின் புளிப்பு: தன் சொத்தாயின் இனிப்போ?

அவன் அதிதிகளைச் சாப்பிட அழைப்பதுபோல அழைத்து இந்த உரலில் தலையைப் போட்டு இந்த உலக்கையினால் இடிப்பது வழக்கம்'' என்று கூறிவிட, அதைக் கேட்ட அதிதிகள் ஓட்டம் பிடிக்க, பர்த்தா வந்ததும் அவர்கள் உலக்கையைக் கேட்டதாகவும், தாங்கள் என்ன சொல்வீர்களோ என்று தான் கொடுக்க பயந்து, மறுத்ததாயும், உடனே அவர்கள் கோபித்துக் கொண்டு போய் விட்டதாயும் ஓர் கட்டுக் கதையைக் கூறிவிட, பர்த்தா அதை நம்பி அவளைத் திட்டி விட்டு, உலக்கையை எடுத்துக் கொண்டு "சுவாமீ! உலக்கை இதோ! இதோ!'' என்று கூவிக் கொண்டு சென்றதாயும், ஓர் கதை வருகிறதே அதுவாகத்தா னிருக்க வேண்டும். அல்லது இருந்து முகங் கழுவி ஈருடன் பேன் வாங்கி விருந்து வந்ததென்று விளம்ப...என்ற ஔவையாரின் பாட்டாக விருக்குமோ! ஆகா! என்ன மோசம் செய்து விட்டார்கள்!'' என்று தவித்தவாறு உள்ளே வந்தார்.

இதற்குள் அந்த நீலி, ராக்ஷஸி "ஐயையோ! அம்மாடீ! அக்ரமமே! அனியாயமே! கொலே! கொலே! என்னை என் புருஷன் கொலை செய்து விட்டான். இத்தகைய பாவியுடன் வாழ்வதைவிடக் கிணற்றில் விழுந்து சாகலாம்; தூக்கிட்டுக் கொண்டு சாகலாம்'' என்று லபோ லபக்கடி என்று வாயிலும், வயிற்றிலும் அறைந்து கொண்டு கோவெனக் கூச்சலிட்டுக் கிணற்றினருகில் ஓடினாள்.

இதற்குள் நாத்தனார் "ஐயோடீ! அம்மாடீ! வேண்டாண்டீ! அண்ணீ! வேண்டாம்; வேண்டாம்; கிணற்றில் விழாதே! நீ இருக்கும்போதே இந்த அழகாக இருக்கையில் நீ இறந்தால் என் கதி என்னவாகும்? வீட்டு கதி என்ன வாகும்? விழாதேடீ! விழாதேடீ!'' என்று துரத்திக் கொண்டே ஓடுகிறாள். இந்த கூச்சலைக் கேட்டு

---

ஆயிரக் கணக்காகப் பணத்தைச் செலவிட்டு ஒரு காரியத்தைச் செய்தாலும் முக்கியமான மனிதர்களின் கவனிப்பு போதாவிடில் அக்காரியம் பரிமளிக்காமல் குடத்திலிட்ட விளக்கு போலாய்விடுகின்றது. சிலர் சொல்ப செலவு செய்தாலும் தங்களது விதரணையினால் கோட்டையிலிட்ட விளக்கு போல் பிரகாசிக்கச் செய்துவிடுகின்றார்கள்.

அக்கம் பக்க முள்ளவர்கள் ஜன்னலாலும், கதவாலும், சுவராலும் எட்டி எட்டிப்பார்த்து "என்ன! என்ன?" என்று கேட்கிறார்கள்.

உலகத்தில் இத்தகைய நீலிப் பெண்கள் இக் காலத்திலும் இன்னுமிருக்கிறார்கள். அவர்களின் மனம்போல உலகமே நடக்க வேண்டுமென்பது அவர்களின் கொள்கை. அதற்குச் சற்று மாறினால் இத்தகைய—இதற்கும் பதின் மடங்கு அதிகமான—ஆகாத்தியம் செய்து, வீட்டையே — ஊரையே — இரண்டடித்து விடுகிறார்கள். ஒருவர்மீது கோபத்திற்காக தம் குழந்தைகளை அடிப்பதும், திட்டுவதும் தம் கையிலகப்பட்ட பாத்திரங்கள், பண்டங்கள் முதலியவற்றையும் போட்டு தடார் புடார் என்று உடைப்பதும் சதா கண்ணைக் கசக்கிக் கொண்டும், மூக்கை சிந்திக் கொண்டும் நான் பெண் பிறந்த சவரணையும்,வாழ்க்கைப் பட்ட சவரணையும்.... யார் யாரோ சாகிறார்களே...நான் சாகக் கூடாதா...இந்த குழந்தைகள் சாகக் கூடாதா...நல்ல தங்காளாட்டும் இவைகளையும் கிணற்றில் தள்ளி விட்டு நானும் சாக மாட்டேனா!...என்று சதா முணு முணு என்று மந்திரம் ஜபிப்பதும், இன்னும் அனேக லீலைகளைச் செய்துத் தாண்டவமாடுவதும் அவர்களுடைய தொழிலாக விளங்குகின்றன.

அத்தகைய மனிதர்கள் என்றைக்கேனும் வீட்டை விட்டு வெளியில் சென்றால் அங்குள்ளவர்களுடன் மேல் கண்ட ப்ரதாபங்களைப் பேசுவதைத் தவிர வேறு வேலை இல்லை. வீடு இரண்டு பட்டால் கூத்தாடிகளுக்கு எளிசு என்பதுபோல இந்த அசட்டு மூதேவிகள் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அதன் அறிவற்ற தன்மையைக் கண்டு எல்லோரும் பரிகஸித்துச் சிரிக்கிறார்கள். இதை யறியாத மூடங்களுக்கு விவகாரம் என்ன தெரியும்.

வாய்ப் பேச்சுடன் நிற்கும் யாரும் காரியத்தில் காட்டவே மாட்டார்கள். கிணற்றில் விழுகிறேன்; குளத்தில் விழுகிறேன்

---

வியப்பு, வேடிக்கை, வம்பு, நிஷ்டூரம், ஆத்திரம், அற்பத்தனம், பெருந் தன்மை, குற்றல், கோண வழக்கு, நகைச்சுவை முதலியன எல்லாம் ஒருங்கே கூடிக் காணவேணுமாயின் அனேக ஸ்திரீகள் நிரம்பிய சாப்பாட்டுப் பந்தியில் சென்றால் காணலாம்.

என்று பயமுறுத்துவதெல்லாம் வீண் ஆடம்பரம்; எல்லாம் அறிவிலித்தனமே! கிணற்றில் விழுந்து விடுவதாக பயமுறுத்திக் கொண்டு ஓடிய ஓலகாம்பாள் கிணற்றினருகில் சென்று தன் புருஷன் வருகிருனு என்று எட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கிருள். நாத்தனர் கூவிக்கொண்டு வருவதற்கு "அக்கா! நீங்கள் பேசாதிருங்கள். இந்த எழவெடுத்த வீட்டில் வாழ்வதைவிட இந்த கிணற்றில் தான் விழுந்து செத்து இந்த வீட்டிலேயே பிசாசாகப் பிறந்து அந்த மனுஷனையே பிடித்துக் கொண்டு ஆட்டினுல்தான் வயிற்றெரிச்சல் தீரும்; நீங்கள் உள்ளே போங்கள்; போங்கோன்னு போங்கோ!" என்று கூறியவாறு தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டும் விழுவதற்கு ஆயத்தமாவது போலும் நடித்துக் கொண்டிருந்தாள்.

இதைக் கண்ட அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சிலர் சிரிப்பதும், சிலர் பரிகவித்துக் காரித் துப்புவதும், சிலர் ஐயோ! முறடு விழுந்துவிடப் போகிறதே!" என்றும் பலவாறு பேச வாரம்பித்தார்கள். "ஆமாம் இவளா விழுந்து சாகிறவள். அப்பாடா! இவள் பலே கேலி பேர்வழி யாயிற்றே! இவள் இறந்து விடுவாள் என்ற பயம் வேண்டாம். நாம் தினம் பார்க்க வில்லையா!" என்று சிலர் கூறுகிருர்கள்.

இந்த அமர்க்கள நிலைமையி லிருக்கையில் தான் கோவிந்தன் அங்கு வந்ததும், இச் செய்தியை அறிந்ததும். இதற்கு முன்பு ஒரு தரம் அந்த பத்திரகாளியம்மாளை தன் தாயார் வீட்டு வகையராவின் கல்யாணத்திற்கு அனுப்பாததினுல் கோபங் கொண்டு தடதடவென்று ஓடி எதிரிலிருந்த குளத்தில் விழுந்துவிட்டு சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு படியைப் பிடித்துக் கொண்டு தன்னை யார் வந்து தூக்கப் போகிருர்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

---

உபயோகமற்ற இடமாக விருப்பினும் அவ்விடத்திற்கு புண்ய மூர்த்தியாகிய கார்த்தியடிகள் விஜயம் செய்த பிறகு அதுவே ஓர் ஆசிரமம் போன்ற அழகுடன் பிரகாசிக்கின்றது.

அப்போது கோவிந்தனுக்கு இச் சாகசம் புதிதாகத் தோன்றியதாகையினால் தன்னால்தான் குளத்தில் விழுந்து இறந்து விட்டாள் என்று தன்னை எங்கே பிடித்துக் கொள்கிறார்களோ என்ற பயத்தினால் அலறிக் கொண்டு ஓடிப்போய் அவளை இழுத்துக் கொண்டு வந்தான். அவள் அப்போது நின்ற மாதிரியைப் பார்த்த பிறகே அவள் செய்தது ஜாலம் என்று தெரிந்து கொண்டான். பிறகு என்ன செய்வது. இதுபோல அதன் பின்னர் எத்தனையோ தரம் நடந்திருக்கிறது; ஆதலால் இம் முறை கோவிந்தன் பயப்படவில்லை.

வெகு கோபத்துடன் "கிணற்றில் விழுந்தாயிற்று இல்லையா! போலீஸுக்குத் தெரியப் படுத்திய பிறகுதான் பிணத்தைத் தூக்க வேண்டும். அறுத்துப் பரிசோதித்துப் பிறகுதான் தகனம் செய்ய வேண்டும்; போலீஸாரைக் கூப்பிடட்டுமா!" என்று கர்ஜித்தார்.

இதைக் கேட்டு அக்கம் பக்கம் உள்ளோர் கொல்லென்று நகைத்து "தூத்து!ஜென்மத்தைச் செறுப்பா லடிக்க.பேமானியே!" என்று பரிகஸித்தார்கள். இதைக் கேட்டுக் கொண்டு குத்துக் கல்லுபோல நிற்கும் ஓலகாம்பாளுக்கு இதைவிட அவமானம் வேறு வேண்டுமா! அவளா கிணற்றில் விழுந்து சாகிறவள். "ஓங்களைத் தேடி வாக்கப்பட்ட சவரணைக்கு நான் செத்துப் பிணமான பிறகும் அயலாரால் அறுத்தும், வெட்டியும் இத் தேகத்தை வதைக்க எண்ணமா! நான் ஏன் அதற்கு இடங் கொடுப்பேன். என்னை எந்த கம்மனாட்டியும் தொட வேண்டாம்; யாரும் எதுவும் செய்ய வேண்டாம். என் விதி; என் கர்மம் என்று தலையிலடித்துக்கொண்டு சற்று நேரம் அங்கேயே நின்று விட்டு உள்ளே தானாகவே வந்து சேர்ந்தாள்.

---

பார்த்த வளவில் பிரமிப்பும், பரவசமும், சித்தமாற்றமும் உண்டாகச் செய்யும் மனிதர்கள் ஏதோ சிலர்தான் இருக்கின்றனர். அவர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ: அம் மகானுபாவனைத் தரிசித்த ஒவ்வொரு மனிதருடைய உள்ளமும் இதையறியாதிருக்க முடியாது.

இதைச் சற்றும் லக்ஷ்யம் செய்யாத கோவிந்தன் "இத்தனை நேரம் ஒரு வேளை கதிர்வேலு வீட்டிற்கு வந்திருக்கலாம் மீண்டும் போய்ப் பார்க்கலாம்" என்று கூறிக்கொண்டே அங்கு சென்றார். அப்போதும் வரவில்லை என்றதைக் கேட்டு அபாரமான விசனத்துடன் வருகையில் "ஐயோ பாவம்! பெத்த மனம் பித்தல்லவா! அதிலும் வயதான கிழவர். காய்ச்சல் வேறேயாம். ஏழையாம் பாவம். இந்த நிலைமையில் சாப்பாட்டிற்கே நம்பியிருந்த பெண்மணியைக் காலை முதல் காணவில்லையே என்று தேடுகையில் மோட்டார் எமனால் மாண்டு பிணமாகக் கிடக்கிறார்கள் என்று கேட்டவுடன் எப்படித்தானய்யா சகிக்க முடியும்? கிழவரின் நிலைமையைப் பார்த்தால் அவர் பிழைக்கக் கூடும் என்று தோன்றவில்லை. ஐயோ பாவம்! எத்தனை குழந்தைகள் கத்துகின்றன. என்ன கண்ராவி கோரம்!" என்று வீதியில் சிலர் பேசிக்கொண்டு செல்வதைக் கேட்டார்.

அவ்வளவுதான் "ஐயையோ! ஏதோ விபரீதம் நேர்ந்து விட்டதே!" என்று அலறியவாறு, "ஐயா! நீங்கள் இப்போது யாரையோ பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்களே! அது என்ன விஷயம் விளங்கச் சொல்லுங்களேன்." என்று கேட்டார். அவர்கள் கதிர்வேலு ஓட்டலில் வந்தது முதல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோன விவரம் வரையில் கூறினார்கள்.

இது கேட்ட கோவிந்தனுடைய துயரம் பின்னும் பெருகி விட்டது. இங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு ஓடினார். அங்கு வெகு அகாலமாகி விட்டதால் உள்ளே விட முடியாதென்று கூறிவிட்டார்கள். சினேக வாஞ்சையால் துடிதுடித்தபடி அங்கிருந்து இந்த ஓட்டலுக்கு ஓடிவந்தார். அப்போதுதான் நாம் முன்னர் தெரிவித்தபடி ஜயமணி குழந்தைகளையும் போட்டுக்கொண்டு அலறி யழுதவாறு

---

சமயலறையைப் பார்க்காமலேயே விசேஷ இடங்களில் பந்தியோடு பந்தியாக உட்கார்ந்து போஜனம் செய்தால் ஓரிலைக்கு இரண்டு இலையாக இழுத்துவிடலாம். சாப்பிடுவதற்கு முன் சமையலறையையும் அதைச் செய்யும் மனிதர்களையும் பார்த்துவிட்டாலோ! அரை வயிறு சோறு தின்பதும் கஷ்டமே ஆகிவிடும்.

படுத்திருந்தாள். இங்கு வந்த கோவிந்தன் இந்த பரிதாபகரமான காக்ஷியைக் கண்டு மனந் தவித்தவாறு "அம்மா! ஜெயமணி! ஜெய மணி!" என்று கூறிக்கொண்டே ஜெயமணியைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டார். அவ்வளவுதான் அவரால் தாங்கமாட்டாது குழந்தையைப் போல கோவெனக் கதறி யழ வாரம்பித்தார்.

ஜெயமணி ஏற்கெனவே புலம்பிக் கொண்டிருக்கையில் இவர் புலம்புவதையும் பார்த்துப் பின்னும் அடங்காமல் கத்த வாரம்பித்து விட்டாள். "மாமா! எங்க அக்கா செத்துப் போய்விட்டாளாமே: எங்கப்பாவை எங்கேயோ தூக்கிக் கொண்டு போய்விட்டார்களே! ஐயையோ! அக்காவையும் அப்பாவையும் பார்க்க வேண்டுமே: மாமா! எங்கப்பா எங்கே! எங்க அக்கா எங்கே! நீங்களாவது கொண்டு போய் காட்டுங்களேன்! நாங்கள் பரதேசியிலும் நாதி யற்றப் பரதேசி யாகிவிட்டோமே: என்ன செய்வேன்? என்று கல் லும் கரையும்படிக் கதறுகிறுள். கோவிந்தன் என்ன சொல்லுவார்— என்ன செய்வார் பாவம்! தன் வீட்டிலிருக்கும் நிலைமையோ நன்கு கத் தெரிந்திருக்கிறது. இக் குழந்தைகளை வைத்துக்கொண்டு எவ் விதம் சமாதானம் செய்வது என்று மிகவும் துக்கித்தார்; தன்னை மீறிய விசனத்தைச் சகிக்காமல் தவித்தார்.

"ஸ்ரீமணியின் பிணம் அங்கு என்ன ஆயிற்றே! உடனே கொண்டு போகாவிடில் அவர்கள் திட்டுவார்களே! இதற்கு என்ன செய்வது?" என்று அந்த கவலை ஒரு புறம் பாதித்தது. அந்த மாண வர்கள் முன் பின்னறியாதவர்களாக விருந்தும் இக் குழந்தைகளை அன்புடன் ஆதரித்துக் கிழவரையும் ஆஸ்பத்திரியில் கொண்டு விட்ட உதவியை எண்ணி வியந்தார். "அன்னியரே இத்தனை செய் திருக்கையில் நாம் மிகவும் சொந்தம் என்று பெயர் வைத்துக் கொண்டு குழந்தைகளை அழைத்துச் செல்லாதிருந்தால் பிறர் பரிக

தனது ஆதி நிலைமையைக் கவனிப்பவர்கள் எங்கோ நூற்றில் ஒரு வர்தான். மத்தியகால அதிர்ஷ்டத்திலேயே தலை தள்ளிக் கவிழ்ந்து விடுகிறுர்கள் சிலர். இவர்களின் போதாக் காலக் கொடுமையினுல் ஆதி கால நிலைமையே வந்து விட்ட பிறகு என்ன செய்வது? எதற்கும் மிதம் வேண்டும்.

வலிக்க மாட்டார்களா! ஐயோ! வீட்டில் பூதமும் பிசாசுமல்லவோ வைத்திருக்கிறேன். என்ன செய்வது?'' என்று சற்று யோசித்தான். என்னவாயினும் ஆகட்டு மென்று எண்ணி ஒரு வண்டியமர்த்தினர்.

அந்த மாணவர்களுக்கு நன்றி யறிதலேயும் வந்தனத்தையும் கூறிவிட்டு குழந்தைகள் எல்லாவற்றையும் அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்கே சென்ருன். கிணற்றில் விழுவதாக பயமுறுத்திய பிசாசு கணவன் வரவில்லேயே என்பதையும் கவனியாமல் நன்ருக ஒரு இலே சோற்றையும் மெல்ல உள்ளே தள்ளிவிட்டுக் கையில் ஒரு அடுக்கு வெற்றிலே பாக்கு வைத்துக்கொண்டு காலே நீட்டியவாறு அந்த இரவிலும் நாலு வாயாடிகளுடன் கூடி தம் தம் வீட்டுப் பெருமையையும், தங்களுடைய சாகஸத்தையும், தங்கள் கணவன் மார்களின் மீது குற்றங்களேயும், மாமி நாத்தியின் பேரில் ஒரு மூட்டை தப்பிதங்களேயும், இதுபோல அனேக விஷயங்களேப் பேசி சத்காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தாள்.

அச் சமயத்தில் வீதியில் வண்டி வந்து நின்றதும் உலகாம் பாள் தம்பி ஊரிலிருந்து வருவதாகக் கடிதம் வந்திருந்ததால் அவன் தான் வந்துவிட்டான் என்று ஓட்டமாக வீதியில் வந்து சந்தோஷ மாக நின்று "உலகநாதா!'' என்றும் கூப்பிட்டுவிட்டாள். அவள் எண்ணத்திலும் சந்தோஷத்திலும் இடி இடித்தது போலத் தன் கண வன் இறங்கியதைப் பார்த்ததும் தூக்கி வாரிப்போட்டது. வெறுப்பும் ஆத்திரமும், அசூயையும் கொண்டு ஒரு திருப்பு திருப்பிக்கொண்டு உள்ளே சென்ருள்.

இந்த வீட்டிற்குத்தான் வருகிருர் என்று ஜெயமணிக்குத் தெரியாதாகையினல் பேசாம லிருந்தாள். இங்கு கோவிந்தன் இறங் கியதும் குழந்தைகளே இறங்கச் சொன்னர். ஜெயமணி "மாமா! எங் களே ஆஸ்பத்திரிக்கோ, அல்லது எங்கள் வீட்டிற்கோ அழைத்துச்

---

வீதியில் புறப்பட்டால் நம்மையே கவனிக்கிருர்களே! காரணம் என்ன, அவர்கள் யார்? என்பதை நாம் சற்று யோசித்து நமக்கு வேண்டிய வர்களுடன் கலந்து கவனித்தால், அவர்களில் சிலர் நம்மைப் பார்த்து வம்பு பேசும் கும்பாக விருப்பதாயும், மற்றும் சிலர் நம்மிடம் பிரியமாகவே

செல்கிறீர்கள் என்று எண்ணினேன். உங்கள் வீட்டிற்கே வந்து விட்டீர்களே! இங்கு வேண்டாம் மாமா! நாங்கள் வரமாட்டோம். எங்கள் வீட்டிற்கே கொண்டு விட்டு விடுங்கள். இங்கு வேண்டாம்.'' என்று கெஞ்சினள். கோவிந்தனின் மனம் எப்படி இருக்கும். ஜெயமணிக்கு அடுத்த குழந்தைகளும் "மாமா வாண்டாம். இங்கே மாமி அடிப்பா ; திட்டுவா. நாங்க வரமாட்டோம். எங்க வீட்டுக்கே போகலாம்'' என்றன.

"வீட்டிலிருக்கும் ராக்ஷஸிகள் இக் குழந்தைகளின் மனம் நோகும்படி ஏதோ செய்து விட்டதால்தான் இப்படி மாட்டேனென்று பிடிவாதம் செய்கின்றனர்கள். ஐயோ! பெண்டு ரூபமாக வந்த பிடாரிகளே என்ன செய்வது?'' என்று விசனித்தவாறு "அம்மா! ஜெயமணீ! நீ ஒன்றிற்கும் பயப்படாதே! நான் உன்னுடன் கூடவே இருக்கிறேன். அந்தக் கழுதைகள் உங்களை ஒன்றும் கூற மாட்டார்கள். வாருங்கள்'' என்று கூறி எத்தனை பலவந்தம் செய்தும் ஜெயமணி மறுத்து விட்டதனுல் வேறு வழி இன்றி அவர்களின் வீட்டிற்கே வண்டியைத் திருப்பச் செய்தார். அப்போது வெகு அகாலமாகி விட்டதால் வீட்டுக்காரர்கள் வீதிக் கதவைத் தாளிட்டு விட்டார்கள்.

வீதி எங்கும் நிச்சப்தம் குடி கொண்டிருந்தது ; பயங்கரமாயுமிருந்தது. கோவிந்தன் கதவைத் தட்டினர். ஸ்ரீமணி இறந்து விட்ட செய்தி காட்டுத் தீ போல முற்றிலும் பரவி விட்டதால் அச் செய்தி வீட்டுக்காரருக்கும் தெரிந்து விட்டது. ஆதலால் ஆஸ்பத்திரியி லிருந்து பிணத்தைத்தான் வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டார்கள் என்று எண்ணி கதவைத் திறக்காமல் "ஐயா! கதவைத் திறக்க முடியாது. வீட்டில் குழந்தையும், குட்டியும், கர்ப்பிணியும் நிறைந்திருக்கிறர்கள்; வெளியில் இறந்து விட்ட பிணத்தை வீட்டிற்

---

கினைத்துப் பார்த்துச் சந்தோஷப்படுகிற கூட்டம் என்பதையும் கண்டு பிடிக்கலாம். அங்ஙனம் செய்வதால் வம்புக்காரரின் கொட்டத்தை யடக்கவும், இஷ்டமானவர்களின் சிநேகத்தை விருத்தி செய்யவும் அனுகூலமாகும்.

குக் கொண்டு வரக் கூடாது. இங்கு கதவைத் திறக்க மாட்டோம்'' என்றார்கள்.

இதைக் கேட்ட கோவிந்தன் திடுக்கிட்டார். "ஐயா! தாங்கள் கூறுவதற்கு முன்பே இவ் விஷயத்தை நான் அறிவேன். பிணத்தைக் கொண்டு வரவில்லை. குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் வந்து பாருங்கள். கிழவருக்கும் மன அதிர்ச்சியினால் உடம்பு ஜாஸ்தி யாகிவிட்டது. அவரும் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். தயவு செய்து கதவைத் திறவுங்கள்'' என்று கேட்டார்.

அதற்குமேல் வீட்டுக்காரர் கதவைத் திறந்து வண்டி யருகில் வந்து பார்த்துவிட்டுப் பிறகு அவர்களை உள்ளே விட அனுமதி யளித்தார்கள். கோவிந்தனுக்கோ "ஈசா! இதுவும் உன் சோதனையா! என்ன கோர சம்பவம்!'' என்று வருத்த முற்றுக் கண்ணீர் வடித்தவாறே குழந்தைகளைப் படுக்க வைத்துத் தானும் அக் கொடிய இரவை அழுத கண்ணும் தொழுத கையுமாகக் கழித்தார்.

"பொழுது விடிந்தால் என்ன செய்தி கேட்குமோ! என்ன நடக்குமோ! ஸ்ரீமணியின் பிணத்தைப் பற்றி என்ன கூறுவார்களோ!'' என்ற பல்வேறு யோசனைக் கடலில் விழுந்து குழம்பியவாறு இரவை யோட்டி, விடியற்காலையைக் கண்டு பிடித்தார்.

பொழுது விடிந்ததும் குழந்தைகளுக்குத் தேறுதலைக் கூறி உட்கார வைத்துவிட்டு அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். ஸ்ரீமணியைத் தனிமையில் அனுப்பிவிட்டுக் கதிர்வேலு எப்படி உயிர் வாழ முடியும். அவரும் இரவே ஸ்ரீமணி யிருப்பிடம் தேடிச் சென்றுவிட்ட

---

வினு:—பக்கத்து வீட்டில் நேற்று பெரிய இறைச்சலாக விருந்ததே! என்ன காரணம்?

விடை:—அதுவா? வீதியில் தடைப்பம் விற்றுக்கொண்டு ஒரு ஹரிஜனப் பெண் வந்தாளாம், அது பாட்டியம்மா கிட்ட நெருங்கினப் போலத் தோன்றியதாம். அதற்குதான் வெசவு, திட்டு, ஸ்நானம் எல்லாம் நடந்தன. ஐயோ வேடிக்கையே! பாட்டியம்மா வீட்டில் சதா நாய் படுத்

செய்தியைக்கேட்ட கோவிந்தன் வீறிட்டார்; கதறினர். "ஐயையோ! இத் திக்கற்ற குழந்தைகளின் விதி இவ்விதமாகவா முடிந்துவிட்டது? ஹா! கடவுளே! இதென்ன கண்ராவி சோதனே! ஜெயமணிக்கு நான் என்ன விதமாக இந்த கோர சம்பவத்தையும் கூறுவேன்? என்று புலம்பித் துடிக்கிறர்.

அப்போதே கதிர்வேலே ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்ட மாணவர்களும் வந்து இச் செய்தியைக் கேட்டு எட்டு குழந்தைகளேயும் நினேத்துக் கண்ணீர் விட்டார்கள். இனிமேல் செய்வதென்ன விருக்கிறது. "சால் உடைந்தாலும் ஐயோ! சமுத்திரம் புரண்டாலும் ஐயோ!" என்பது போலகேட்ட பேர் எல்லோரும், 'ஐயோ! ஐயோ!' என்று அலறித் துடித்தார்கள். எட்டு குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு ஊரே அன்று கலங்கிக் கண்ணீர் வடித்தது என்ருல் வேறு கூறவேண்டுமா! இச் சந்தர்ப்பத்தை வரைய கையும் நடுங்குகின்றது; மனமும் கரைந்தோடுகின்றது என்ருல் மேற் கொண்டு என்ன நடந்ததென்பதை விவரிப்ப தெங்ஙனம்? ஊகித்தறிதலே நலம்.

* * * *

கோவிந்தனே முன்னின்று இரு சவங்களேயும் அடக்கம் செய்து கர்மக்ரியைகளேயும் செய்தார். அவரோ உத்தியோகத்திலிருப்பவர். இந்த எட்டுக் குழந்தைகளேயும் அவர் சதா கட்டிக் காக்க எப்படி முடியும்? இந்த கோர சம்பவங்கள் நடந்த அன்று முதல் இரண்டு மாதம் தனக்கு ஏற்கெனவே இருந்த லீவை வாங்கிக் கொண்டார். தன் வீட்டிற்கே செல்லாமல் கதிர்வேலுவின் வீட்டிலேயே இருந்து தன் கைப் பணத்திஞல் மேல் கொண்ட காரியத்தையும் செய்து குழந்தைகளேயும் கவனிக்கத் தொடங்கினர்.

படுநீலிக்கு—பிரமராக்ஷஸிக்கு — ஒப்பான மனேயாளுடன் வாழுவதைவிட இதுவே மேலானது என்று மனத்தில் உறுதி

---

திருப்பதற்கு ஒன்றுங் காணேம்; கோச்சு வண்டியில் ருத்திராக்ஷமும் நாமமடியுமாக கோச்மான் கிட்ட செல்கையில் ஒரு ஸ்நானத்தையுங் காணேம். இந்த வேஷம் போடுவதிலா பாட்டிக்குச் சொர்க்கம் வரும். பெரிய……… தான் வரும்……

கொண்டு வைராக்யம் வைத்துக்கொண்டார். குழந்தைகளின் பரிதா பத்தைக் கூறவே வேண்டாம். இரண்டாங்கட்டான் குழந்தைக ளெல்லாம் "அப்பா எங்கே? அக்கா எங்கே?" என்று பிடிவாதம் செய்து அழுவதைச் சமாதானமே செய்ய முடியவில்லை. கோவிந்தன் அவர்கள் மீது அபாரமான அன்பு கொண்டு பாடு படுவதைக் கண்டு உலகமே வியப்புற்றது.

ஆனல் அவருடைய மனைவியும் சகோதரியும் சில தினங்கள் வரையில் ஆத்திரத்தில் பேசாம லிருந்தார்கள் வரிசையாக அனேக தினங்கள் வீட்டிற்கே வராமல் நின்று விட்டதால் பொறுமையும் அகங்காரமும் கொண்டு அவரைத் திட்டியும் அவதூ றுகப் பேசியும் அமர்க்களம் செய்யத் தொடங்கி விட்டார்கள். இதற்கும் கோவிந்தன் அசையவே இல்லை.

ஒரு தினம் இரு பத்திரகாளிகளும் சேர்ந்து இந்த வீட்டிற்கே வந்து விட்டார்கள். இவர்களைப் பார்க்கும்போதே குழந்தைகளுக்கு இருக்கும் விசனத்தோடு, அபாரமான பயத்தையும் அடைந்து கோவிந்தனிடம் பதுங்கிக் கொண்டன. கோவிந்தன் அவர்களை ஒருங்கு கூட்டி அணைத்துக் கொண்டு "பயப்படாதீர்கள்; பயப் படாதீர்கள்" என்று தைரியங் கூறினர்.

இந்த காட்சியை நேரில் கண்ட கொள்ளி வாய்ப் பேய்கள் அலறி யடித்துக் கொண்டு "இதென்ன அக்ரமம். இதென்ன அநி யாயம்! வீடா வாசலா ஒன்றுமில்லை எல்லோரும் இறந்து விட் டார்கள் என்று எண்ணி தலை முழுகி விட்டு குரங்குக் குட்டிகளைப் போன்ற இந்த சனியன்களை அடை காத்துக் கொண்டு உட்கார்ந் திருக்கிறீர்களா! ஊரிலே எத்தனையோ பேர்கள் சாகிறார்கள்; எத்

---

வினு :—கோயிலுக்குச் சென்றயே: என்ன அதிசயங் கண்டாய்?

விடை :—அதிசயமா! சோதாக் கூட்டங்களின் ஆரவாரமும், சுண்ட லுக்கும் புளியோதரைக்கும் அம்மாமார்கள் சண்டை செய்யும் விநோதத் தையும் கண்டேன். சுவாமி எப்போதும் போலத்தான் விளங்கினர், விசேஷமில்லை.

தனேயோ பேர் போகிருர்கள். இதற்கெல்லாம் நீங்கள்தான் கர்த்தாவா! நீங்கள்தான் முதலாளியா! உங்க அண்ணனு, தம்பியா! செத்த இழவெல்லாம் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வராதிருந்தால் எப்படி சாகிறதென்று எண்ணினீர்கள். வீட்டில் உப்பில்லே. புளி இல்லே, அரிசி இல்லே. நாங்கள் எல்லாம் பட்டினி கிடந்து சாக வேண்டுமென்று எண்ணமா!'' என்று வாயில் வந்தபடி கூச்ச விட்டு லபோ திபோ என்று அடித்துக் கொண்டு கத்தித் தாண்டவமாடினுர்கள்.

இத்தகைய ராக்ஷஸப் பேர்வழிகள் இக் காலத்திலும் இல்லாமலில்லே. புருஷன் மனத்திற்கு எத்தனே விதமான கோணல்களேச் செய்து நோக வைக்கலாமோ அத்தனேயும் தாமே செய்துவிட்டு அதனுல் அவன் மனம் வெதும்பி வேற்றுமை பாராட்டினுலோ அறிவிலியாகிய மனேவியும் அதே போன்ற சுற்றத்தினரும் அவனேயே திருப்பிக் கொண்டு வசை கூறுவதும் அவதூருகப் பேசுவதும் கண்டவர்களிடமெல்லாம் வித்யாசமாயும் விபரீதமாயும் பேசுவதும், பின்னும் தாறுமாருக நடந்து கொண்டு முறிந்த மனக் கிளேயை நன்ருக ஒடிந்து விழும்படியே செய்து விடுகிருர்கள். இத்தகைய சண்டித்தனமுள்ள பெண்களின் குடும்பத்தில் இன்பமேது? ஒற்றுமை ஏது? பார்ப்பதற்கு அழகுதான் ஏது, எல்லாம் வீண்தான். இதையறிந்தாலன்ருே சுகமுண்டு. அக் கோஷ்டியில் முதல் பரிசு பெற்ற ஓலகாம்பாளின் லீலேயைக் கூற வேண்டுமா?

இந்த ஜடப் பொருள்கள் வந்திருப்பதையே சற்றும் கவனிக்காத கோவிந்தன் இவர்களே முகமெடுத்தும் பார்க்கவில்லே; பதிலும் கூறவில்லே. வாயைத் திறக்காமல் எட்டு குழந்தைகளேயும் அழைத்துக்கொண்டு கதவைப் பூட்டி விட்டு வீதியில் சென்ற வண்டியில் ஏற்றித் தாமும் அமர்ந்து வண்டியை வேகமாக விடச் செய்தார்.

---

சண்டை யிடுவதிலேயே சிலருக்கு அதிகப் பிரீதி. அதிலும் சம்பந்திபுடன் சண்டையிட மிக ஆசை. இதன் பயன் தங்கள் மக்களேயே தாக்கும் என்பதை இரு திறத்தினரும் கவனிப்பதில்லே. பிறகு கண்ணேப் பிசைந்து பலன் யாது?

இப்போது அப் பேய்கள் என்ன செய்யும்? "அக்கா! இதென்ன அக்ரமம். போய் விட்டாரே! போய் விட்டாரே! கூப்பிடுங்கள்; கூப்பிடுங்கள்" என்றாள். அக்காவும், "அடே கோவிந்தா! கோவிந்தா!" என்று கத்தினாள். அது அந்த ஏழுமலை கோவிந்தனுக்குத்தான் அர்ப்பணமாக வேண்டும்.

3 ...
...11 A ...
N34413

182963

---

# ஜெயஸஞ்சீவி

குறைந்த விலை நிறைந்த சுவை

விலை அணா நான்கேதான்

1. தாண்டவராயனின் கூட்டத்தார் செய்யும் சூட்சி என்ன ?

2. ப்ளான் (மருந்து முறைக் காகிதம்) கெட்டுப் போய் விட்ட மர்மமென்ன ?

3. தாமோதரனுக்குற்ற ஆபத்தை ஆதிமுதல் நீக்கியது யார் ?

4. துப்பறியும் திறமை என்ன ?

இதுபோன்ற அனேக விஷயங்களை ஆநந்தமாகப் படித்து இன்புற வேண்டுமாயின், உடனே நாலணா தபால் பில்லைகளனுப்பி **ஜெயஸஞ்சீவி** என்கிற சிறிய நாவலை வாங்கிப் படியுங்கள்.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல

எங்கள் பிரசித்தி பெற்ற

## "மெடல்" மார்க்கு

பட்டுச் சேலைகளைப் பார்த்து

இதர நெசவுக்காரர்களும், பாக்டரிகளும் விதேசப் பட்டு நூலைக் கொண்டு தயாரித்த சேலைகளை மார்க்கட்டில் விற்பனை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

## ஆகையால்

நீங்கள் வாங்கும் பட்டுச் சேலைகளில் எங்கள்
"மேடல் மார்க்" டிக்கட் இருக்கிறதா என்பதைக்
கவனித்து வாங்குங்கள்.

## இந்த டிக்கட்டுதான்

உங்களையும், உங்கள் வியாபாரிகளையும்
ஏமாறச் செய்யாமல் இருப்பது

---

கெய்ஸ்ர்—இ—ஹிண்ட் உல்லன்,
காட்டன் & ஸில்க் மில்ஸ் லிமிடெட்.,

**பெங்களூர்.**

சென்னை ராஜதானி ஸோல் ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்

## டி. ஆர். என். சாமி,

**2-74, கிடங்குத் தெரு, : மதராஸ.**

# பாரதியார் நூல்கள்

## கதைக் கொத்து

இதில் பாரதியார் தன் சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள், இன்னும் நமது மடமை, மூட பக்தி, ஸ்திரீகளின் நிலைமை இவை போன்ற ஸமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை எடுத்துரைக்கிறார். எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டது. அணா 0 8 0

## பகவத் கீதை

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழகிய தமிழ் உரையும், விரிவான முன்முகமும் அடங்கியது. அணா 0 8 0

## வசனங்கள்

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவதந்திரம், பதஞ்சலி யோக ஸூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன. ரூபா. 2 0 0

## கவிதைகள்

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான் மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திச்சூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தன. ரூபா 2 8 0

---

# சங்கு நூல்கள்

### மகாத்மா காந்தி எழுதிய

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| சத்திய சோதனை | I | 1 | 8 |
| ஷை | II | 2 | 0 |
| இல்லறமும் பிரம்மசரியமும் | | 0 | 6 |
| அனாசக்தியோகம் | | 0 | 4 |
| ஆரோக்கிய வழி | | 0 | 4 |
| நீதி தருமம் | | 0 | 2 |
| கீதாபோதனை | | 0 | 2 |
| உத்தம வாழ்க்கை | | 0 | 2 |
| ஹிந்து தர்மம் | | 0 | 2 |

### ரோமேன் ரோலண்டு எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| மகாத்மா காந்தி (புதிய பதிப்பு | 0 | 4 |

### வில்லியம் தர்ஸ்டன் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| இல்லற மகா ரகஸியம் | 0 | 4 |

### பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான

| | ரூ. | அ |
|---|---|---|
| இந்தியாவின் கடன் பொறுப்பு | 0 | 4 |

### க. சந்தானம் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| சத்திய சமாஜம் | 0 | 4 |

### வ. வே. ஸு. அய்யர் எழுதிய

| | ரூ. | அ |
|---|---|---|
| மங்கையர்க்கரசியின் காதல் கதைகள் | 0 | 8 |

---

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி சென்னை.

ஒரு அரிய சந்தர்ப்பம்!

# இனி ஸ்திரீகளும் இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியுமென்பதையும் கருதி,

# யுனைடெட் இந்தியா அஷியூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

பதினேன்ருவதாண்டு! பிறந்துவிட்டது!!

வருட சந்தா ரூ. 1 8 0 தனிப்பிரதி அணா. 2.

# "ஜகன்மோகினி"

இவ்வாண்டில் ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய தியாகக்கொடி எனும் அற்புதமான துப்பறியும் நாவல் அநேக அனுபவ நீதி சாரங்களுடன் வெளிவருகின்றது. இக்கதை முடிந்ததும், மற்றொரு நாவல் வெளிவரும். வருஷம் முடிந்ததும், இவ்விரண்டு நாவல்களும் ரூ. 3-க்கு விற்கப்படுமாதலால் இப்பொழுதே சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த விலையில் நிறைந்த பக்கங்களையுடைய சிறந்த நாவல்களை யடைவதுடன் மேற்படி நூலாசிரியை எழுதிய இதர நாவல்களையும் மறு பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளலா மென்பதைக் கவனிக்கவும். மேலும் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஜீவிய சந்தா ரூ. 25. ஜீவிய சந்தாநேயர்களுக்கு இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனமாக அனுப்பப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

"ஜகன்மோகினி" ஆசிரியை

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

பாடிய பாடல்களை

## நீங்கள் இன்னும் கேட்கவில்லையா?

இன்றே கேட்டு ஆனந்தியுங்கள்.

| | | |
|---|---|---|
| GE 197 | ஏழைமுகம் பாரய்யா - ஸிந்து பைரவி<br>போகுது பார் பணம் - நட பைரவி | விலை ரூ. 2-12-0 |
| GE 205 | சொல்லுவம் வைஷ்ணவன் - பியாக்<br>சத்யாக்ரகத்தியாகி - மாண்ட் | விலை ரூ. 2-12-0 |
| GE 222 | வெட்கமில்லையோ மனத்தில் - பியாக்<br>தாயே தந்தை யென்னும் - ராகமாலிகை | விலை ரூ. 2-12-0 |
| GE 236 | [illegible] யாலரா 1. - கல்யாணி<br>" 2. - " | விலை ரூ. 2-12-0 |

ஆர்வ்ஸ் கொலம்பியா ஹவுஸ்,

மதராஸ்.

எல்லா "கொலம்பியா" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY MADRAS.

## மூன்று மாதங்களில் கொடுக்கலாம்

நமது புது சந்தா நேயர்களில் பலர் நமது நூலாசிரியை எழுதிய எல்லா (21) நாவல்களையும் வாங்கிப் படிக்க ஆவலாக இருக்கிறதென்றும், ஆனால் ஒரே மொத்தமாகப் பணத்தைக் கொடுக்கக் கஷ்டமாயிருக்கிறதென்றும் சொல்வதால், அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்யக் கருதி கீழ்க்கண்ட ஏற்பாடு செய்துள்ளோம்.

முதலில் ரூ 12 முன் பணமனுப்பி, ரயில்வே ஸ்டேஷனின் பெயரைத் தெரிவித்தால் 21 புத்தகங்களையும் அனுப்பிவிடுகிறோம். மீதியுள்ள பத்து ரூபாயை மாதம் ரூ. 5 வீதம் இரண்டு மாதங்களில் அனுப்பலாம்.

இந்த ஏற்பாடு இந்தியாவிலுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் என்பதைக் கவனிக்கவும்.

வேண்டியவர்கள் உடனே முன் பணமனுப்புங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| வைதேகி (2-பாகங்கள்) | 2 | 8 | ... | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | ... | 2 | 0 |
| ராதாமணி | 2 | 8 | ... | 2 | 0 |
| சாருலோசனை (2-பாகங்கள்) | 2 | 8 | ... | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | ... | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | ... | 1 | 12 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | ... | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | ... | 1 | 12 |
| சண்பக விஜயம் | 1 | 12 | ... | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | ... | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | ... | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | ... | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | ... | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | ... | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | ... | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | ... | 0 | 14 |
| கோபாலரத்னம் | 0 | 14 | ... | 0 | 12 |
| நளினசேகரன் | 0 | 8 | ... | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | ... | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | ... | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | ... | 0 | 6 |

**Jaganmohini** (Feb. 1934) Regd. No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

எஜண்டு:
ஏ. பி. பாரெக்கு,
சைனா பஜார் ரோட்,
சென்னை.

அமிர்தாஞ்சன் டிபோ.,
சென்னை கல்கத்தா
பம்பாய்